DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
i HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

HomeLife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial
Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1549
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday December 12, 2025

# பெண், பதவி, தங்கம் ஆகியவற்றிற்காக அநுரவிடம் மண்டியிடும் எம்.பி.க்கள்





“சிறுபான்மையினங்களான தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாவலர்களாக, உரிமைப் போராளிகளாக இன உணர்வாளர்களாக தம்மைக் காட்டிக்கொள்ளும் பலரில் தற்போது இந்த 3 எம்.பி.க்களும் பெண்ணுக்காக, பதவிக்காக, தங்கத்திற்காக தமது கட்சி, கொள்கை, இலக்கு, உரிமை என்ற ஆடைகளைக் கழற்றி அநுர அரசுக்கு துதி பாடி அம்மணமாகத் தொடங்கியுள்ளனர்“ ------------- கே.பாலா

“அரசியலில் இன்றைய எதிரி நாளைய நண்பன்,, இன்றைய நண்பன் நாளைய எதிரி““என்பது பொது விதி. அதனைத்தான் நகைச்சுவை நடிகர் கவுண்டமணியும் தனது பேச்சு வழக்கில் ““அரசியலில் இதுவெல்லாம் சாதாரணமப்பா““ என்று கூறியிருப்பார்.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

# ”கனடியர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற எமது அரசாங்கம் அவர்களின் நல்வாழ்விற்காக சிரமங்களை எதிர்கொள்ள தயாராகவே உள்ளது”

## ஒட்டாவா நகரில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கனடிய பிரதமர் மார்க் கார்னி உற்சாகத்துடன் அறிவிப்பு



(ஒட்டாவா நகரிலிருந்து சத்தியன் ஜெகன்)

உலகின் சிறந்த நாடுகளில் ஒன்றான கனடாவை தங்கள் வாழ்விடமாகவும் சிறந்த வாழ்க்கை தமக்கு கிட்ட வேண்டும் எண்ணம் கொண்டவர்களாகவும் உள்ள கனடியர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற எமது அரசாங்கம் அவர்களின் நல்வாழ்விற்காக சிரமங்களை எதிர்கொள்ள தயாராகவே உள்ளது. எனவே நாம் பல அண்மைக்காலத்தில் பல சிரமங்களை எதிர்கொண்டாலும் எமது அமைச்சர்கள் மற்றும் அறிவு சார்ந்தவர்களின் முறையான செயற்பாடுகளினால் எமது தேசத்தின் பொருளாதாரம் மிகவும் ஆரோக்கியமான பாதையில் சென்று கொண்டிருக்கின்றது என்பதை நாமும் எமது மக்களும் அவதானிக்கின்றார்கள். எனவே பல நல்ல திட்டங்களை அமுல்செய்யவும் எமது மக்களிற்கு பல வசதிகளை செய்து கொடுக்கவும். கனடிய இராணுவத்தை ஒரு பலன் கொண்டதாக உயர்த்தவும் நெடுந்தூரப் பாதைகளை அமைக்கவும் பெருந்தொகைப் நிதியை நாம் ஒதுக்கியுள்ளோம்”.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

தமிழில் உரையாடி உங்கள் நெருக்கடியான நேரத்தில்
எமது சேவைகளை பூரண திருப்தியுடன் பெற்றுக்கொள்ளுங்கள்
SMART RESTORATION
We work with your insurance company
ARUN ANANTH
24/7 EMERGENCY SERVICES
647-849-4444 ( Cell )
1-833-SMART 09 ( Office )
info.smartrestoration@gmail.com
smart-restoration.net
SERVICES
Water and flood services • Mold remediation • Trauma
Sewage clean up • Fire & smoke • 24/7/365 days
LICENSED INSURED CERTIFIED

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான
சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# கலையும் இலக்கியமும் தமிழர் பண்பாட்டுக் கோலங்களும் அடங்கலாக நாளை நடைபெறும் இவ்வாண்டின் உதயன் பல்சுவைக் கலை விழா!

உலகின் பல நாடுகளிலும் பல சவால்களுக்கு முகம் கொடுத்த வண்ணம் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கும் செய்திப் பத்திரிகை ஒவ்வொன்றும் செய்திகளை தாங்கி வருவதோடு மாத்திரமல்லாது, அந்தந்த மொழி சார்ந்த கலை, இலக்கியம், மொழியின் வரலாறு மற்றும் பண்பாட்டுக் கோலங்களையும் மக்கள் அறியும் வண்ணமும் அவற்றை ஊக்குவிக்கும் வண்ணமும் ஆக்கங்களை தாங்கி வெளிவந்து கொண்டிருக்கின்றன என்றால் அது மிகையாகாது.

'எமது தாயகமான இலங்கையின் கொழும்பிலிருந்தும் எமது தமிழர் தலை நகரமாம் யாழ்ப்பாணத்திலிருந்தும் வெளிவந்து கொண்டிருக்கும் நாளிதழ்களும் வாரஇதழ்களும் இவ்வாறான பணிகளையே ஆற்றிவருகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையே! அவ்வாறான பத்திரிகைகளின் வாயிலாக உருவாக்கப்பெற்ற எழுத்தாளர்களும் கவிஞர்களும் கட்டுரையாளர்களும் சில வருடங்களுக்குப் பின்னர் ஆயிரக்கணக்கான வாசகர்களைக் கொண்ட படைப்பாளிகளாக இனங் காணப்பெறுகின்றார்கள். இந்த வளர்ச்சி என்பது பத்திரிகைகள் ஆற்றும் ஊடகச் சேவையின் உச்சம் என்றும் நாம் கருதலாம்.

இவ்வாறான எமது தாயக மற்றும் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் பல பல்
தேசிய நிறுவனங்களால் நடத்தப்பெறும் இலாபம் சம்பாதிக்கும் நிறுவனங்களாக விளங்குவதும் எமது எழுத்தாளர்களுக்கும் மற்றும் கட்டுரையாளர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளன.

எமது தமிழ் மக்கள் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக
உலகின் பல நாடுகளுக்கும் புலம் பெயர்ந்த காரணத்தால் அந்தந்த நாடுகளிலும் பல வாரப் பத்திரிகைகளின் தோற்றம் இடம்பெற்றது. மேற்படி பத்திரிகைகள் வாயிலாக பல எழுத்தாளர்களும் கவிஞர்களும் கட்டுரையாளர்களும் தோன்றி தற்போது நன்கு அறியப்பெற்றவர்களாக காட்சி தருகின்றார்கள். புலம் பெயர் தமிழ் இலக்கியம் அல்லது புலம்பெயர் படைப்பாளிகள் என்ற பல தளங்கள் இங்கு நிறுவப்பெற்று ஆரோக்கியமான பாதையில் சென்று கொண்டிருக்கின்றன. அந்த வரிசையில் எமது கனடா உதயன் பத்திரிகை இவ்வாண்டு தனது 29வது ஆண்டை பூர்த்தி செய்து அடுத்த படியில் பாதம் பதிக்கின்றது என்ற மகிழ்ச்சியான தகவலை எமது செய்தியாளர்கள். கட்டுரையாளர்கள். வாசக அன்பர்கள் மற்றும் வர்த்தகப் பெருமக்கள் ஆகியவர்களோடு பகிர்ந்த கொள்கின்றோம். எமது வாரப் பத்திரிகையானது கனடாவிலும் மற்றும் ஏனைய சில மேற்குலக நாடுகளிலும் உள்ள எழுத்தாளர்களையும் கட்டுரையாளர்களையும் ஊக்குவித்து அவர்களது படைப்புகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் வழக்கத்தை இன்றும் நிறுத்திவிடாமல் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதனால் எமது பத்திரிகை நிறுவியுள்ள "இணைப்புப் பாலம" என்னும் பிணைப்பும் இன்னும் நீண்டு கொண்டே செல்கின்றது என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும்.

இவ்வாறான ஒரு தொடர் பயணத்தில் வருடாந்தம் நாம் நடத்தி வருகின்ற பல்சுவைக் கலைவிழாக்களின் வரிசையில் நடைபெறும் இவ்வாண்டிற்கான விழா எதிர்வரும் 13ம் திகதி கனடாவின் ஸ்காபுறோ நகரில் நடைபெறுகின்றது. மேற்படி விழாவில் இடம்பெறும் கலை இலக்கியம் மற்றும் தமிழர் பண்பாட்டுக் கோலங்கள் அத்துடன் தமிழர் வரலாறு தொடர்பான படைப்புக்களை கண்டும் கேட்டும் ரசிக்கும் வண்ணம் எமது அன்பான வாசகப் பெருமக்களுக்கும் அழைப்பை விடுப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். நாளை சனிக்கிழமை நடைபெறும் உதயன் பல்சுவைக் கலைவிழாவில் சந்திக்கும் வரை அனைவரிடமிருந்தும் தற்காலிகமாக விடைபெறுகின்றோம்!



Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD
HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டணத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

COOK WANTED FOR A RESTAURANT IN TORONTO

**Church Street/ Wellesley Road** சந்திப்புக்கு அருகில் உள்ள இத்தாலிய உணவு தயாரிக்கும் உணவகத்தில் **COOK** வேலைக்கு ஆட்கள் தேவை.
அனுபவம் தேவை. தொடர்புகளுக்கு: 416 414 2241



இலங்கை செய்திகள்
Sri Lanka News

கனகராசா சரவணன்

# தலைவர் பிரபாகரன் அவர்களால் உருவாக்கப்பட கட்சி என்பதால் மக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு வாக்களித்தனர். இனி அந்த பருப்பு வேகாது

## ஈரோஸ் கட்சியின் தலைவர் இரா. பிரபாகரன்




விடுதலைப் புலிகளின் தலைவர் தமிழ் மக்களை பாதுகாக்க ஒரு அரசியல் சக்தி உருவாக்க வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கினார். அவரால் உருவாக்கப்பட்ட கட்சி என்றதால் வாக்களிக்க வேண்டும் என்று மக்கள் வாக்களித்தனர் எனவே இனி அந்த பருப்பு வேகாது? புலம் பெயர்ந்த மக்கள் அனுப்பிய பல கோடி ரூபா பணம் மக்களிடம் சென்று சேரவில்லை எனவே இனி யாரும் தப்ப முடியாது என ஈரோஸ் கட்சியின் தலைவர் இரா. பிரபாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வெய் ஒப் மீடியா ஊடக கற்கை நிலையத்தில் 6ம் திகதி சனிக்கிழமை (06-12-2025) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மலையக மக்களின் பணத்தை எவ்வாறு தொண்டமான் மற்றும் ஆறுமுகம் தொண்டமான் மற்றும் மனோ கணேசன் போன்ற அரசியல்வாதிகள் சூறையாடினார்களோ அதே போன்று வட கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விதவைகள், அங்கவீனர்கள், சிறுவர்கள், முதியவர்கள் உட்பட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வடகிழக்கை புனரமைப்பதற்காக யுத்தம் முடிவுற்ற தன் பின்னர் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள மக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் சுமந்திரன் சாணக்கியன் ஆகியோருக்கு எவ்வளவு பணம் அனுப்பப்பட்டது அது மக்களுக்கு சேரவில்லை.

தொண்டமானுக்கு அடுத்த கூட்டம் இது சுவிஸ், லண்டன், கனடாவில் யாருக்கு எத்தனை கோடி பணம் கொடுத்தது என்ற ஆதாரம் இருக்கிறது எனவே இனி யாரும் தப்ப முடியாது உங்களுக்கு மனித உரிமை ஆணைக்குழு மற்றும் நீதிமன்றம் செல்வோம். உங்கள் வண்டவாளம் வெளிவரும்.

ஐந்து பேர் தமிழ் தேசிய கூட்டமைப்பு என இருந்து கொண்டு இன்று பிரிந்தவுடன் தப்பித்தோம் என்று நினைக்க வேண்டாம் அதேமாதிரி செந்தில் தொண்டமான் கிழக்கு ஆளுநராக இருந்த போது மாகாணத்தில் உள்ள எல்லா பிரதேச சபைகளில் இருந்த அப்பாவி மக்கள் வரிப்பணத்தை எடுத்து சமாதான புறா விட்டதும் காளை மாடுகளை இறக்கி நிகழ்வு செய்ததுதான் அவரின் வேலை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாங்கேணி, கதிரவெளி, காயங்கேணி வாகரையில் உள்ள அரச காணிகளை கம்பனிகளுக்கு கொடுத்து அதற்கு பல இலச்சம் தரகு பணம் வாங்கி கொண்டது மட்டுமல்ல இல்மனைட் அகழ்விற்கு கம்பனிகளை கொண்டுவந்து அதற்கு தரகு பணமாக பல கோடி ரூபா பணத்தை வாங்கி கொண்டதுடன் அரசாங்க பணத்தில் ஒரு வருடத்தில் 3 இலச்சம் ரூபாவுக்கு 500 கிலோ கயூ வாங்கி சாப்பிட்டுள்ள அவர் கோடி கணக்கில் சுருட்டிக் கொண்டு சென்று தப்பித்தேன் என்று நினைக்க வேண்டாம்.

விடுதலைப் புலிகளின் தலைவர் இந்த மண்ணுக்காக மக்களுக்காக தனது குடும்பத்தையே தாரை வாரத்துக் கொடுத்த ஒரு தீர்க்கதரிசனம் கொண்ட தியாகி அவர் ஆயுத போராட்டம் மௌனிக்கப் போகிறது எனவே தமிழ் மக்களை பாதுகாக்க ஒரு அரசியல் சக்தி உருவாக்க வேண்டும் என ஒட்டுக்குழுக்கள் அனைத்தையும் ஒன்றாக இணைத்து சம்பந்தன் தலைமையில் தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கி 22 பேரை நாடாளுமன்றம் அனுப்பினார்.

யுத்தம் முடிவுற்ற பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பு 11 நாடாளுமன்ற உறுப்பினர்களாக குறைந்தது எனவே புலிகள் இல்லை என்றால் உங்களுக்கு வாக்கு இல்லை அந்த தலைவரால் உருவாக்கப்பட்ட கட்சி என்றதால் வாக்களிக்க வேண்டும் என்று மக்கள் வாக்களித்தனர் எனவே இனி அந்த பருப்பு வேகாது.

ஈரோஸ் கட்சியை மக்கள் நம்புகின்றனர் நான் தலைவர் அல்ல தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு நல்ல தலைமைத்துவத்தை உருவாக்க ஈரோஸ் ஒரு பாலமாக ஏணிப்படியாக செயல்படும் என்றார்.

உலக செய்திகள்
World News

# உலக அறுவைசிகிச்சை அமையத்தின் தலைவராக பேராசிரியர் தவம் தம்பிப்பிள்ளை நியமிக்கப்பெற்றமை. தமிழர்களுக்கு ஒரு "தலைநிமிர்வு"

பேராசிரியர் தவம் தம்பிப்பிள்ளை 03-12-25 இல் சர்வதேச சத்திர சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் புதிய தலைவராக பொறுப்பேற்றார். இந்த அமைப்பானது உலகநாடுகளில் உள்ள அனைத்து சத்திர சிகிச்சை நிபுணர்களை இணைத்து பாதிக்கப்பட்ட வர்களுக்கு சேவை வழங்க வேண்டும் எனும் உயரிய நோக்கத்தை கொண்டது. யாழ் கைதடி மண்ணின் மைந்தனும், புனித பரியோவான் கல்லூரியின் பழைய மாணவருமான தவம் அவர்கள் மருத்துவ உலகில் நன்கு அறியப்பட்டவர்.

தற்போது அமெரிக்காவின் சான்போர்ட் மருத்துவமனையில் உறுப்பு மாற்று சத்திரசிகிச்சை நிபுணராக பணியாற்றி வருகிறார். அடிக்கடி இலங்கை வருகை தந்து பல்வேறு சுகாதார நலத்திட்டங்களுக்கு உதவி செய்து வருவதோடு, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சிறுநீரக மாற்று சிகிச்சை திட்டம் ஆரம்பிக்க காரணமான முக்கிய நபராக விளங்குகிறார்.



அமெரிக்க அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் IMHO (USA) உறுப்பினராக கடந்த 20 ஆண்டுகளாக இலங்கையில் பல தொண்டுப்பணிகளில் ஈடுபட்டு பல்வேறு சேவைகளை செய்து வருகிறார். IMHO இலங்கையில் பல்வேறு சுகாதார கல்வி மற்றும் வலுவிழந்த வர்களுக்கு பல மில்லியன் அமெரிக்க டாலர்கள் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.





8ம் திகதி திங்கட்கிழமையன்று சிங்கப்பூரில் நடைபெற்ற நிகழ்வில், பேராசிரியர் தவம் தம்பிப்பிள்ளை அவர்கள் சர்வதேச சத்திர சிகிச்சை நிபுணர்கள் அமையத்தின் (International College of Surgeons) உலக அமைப்பின் தலைவராக அறிமுகப்படுத்தப்பட்டதை காண்பது பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்கிறது. இந்த நிகழ்விற்கு பல்வேறு உலக நாடுகளில் இருந்து பல நிபுணர்கள் வருகைதந்து பல்வேறு நிலைகளில் பங்குபற்றினர்கள்.

# பாரதியாரின் சிந்தனைகள் இன்னும் செயல்வடிவம் பெறவில்லை என ஆதங்கம் வெளியிட்ட வட மாகாணஆளுநர்!



மகாகவி பாரதியார் நூற்றாண்டுக்கு முன்பே விதைத்துச் சென்ற முற்போக்குச் சிந்தனைகள், இன்றும் எமது சமூகத்தில் முழுமையான செயல்வடிவம் பெறவில்லை என்பதே நிதர்சனம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.





மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் ஜனன தின நிகழ்வு, யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் 11ம் திகதி அன்று வியாழக்கிழமை (11.12.2025) மாலை நடைபெற்றது.

இந்தியத் துணைத்தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் சிறீ சாய்முரளி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்டு, பாரதியாரின் திருவுருவப்படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திய பின்னர் உரையாற்றுகையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், டித்வா பேரிடரால் எமது மாகாணம் பாதிக்கப்பட்டுள்ள இக்கட்டான சூழலில், இந்நிகழ்வு மிகவும் எளிமையான முறையில் முன்னெடுக்கப்படுகின்றது. இந்தத் தருணத்தில், வடக்கு மாகாண மக்கள் சார்பாக இந்திய அரசாங்கத்துக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எமது மக்கள் அனர்த்தத்தைச் சந்தித்தபோது, மீட்புப் பணிகள் மற்றும் நிவாரண உதவிகள் எனப் பல்வேறு விடயங்களில் முதலாவது நாடாக இந்தியா எமக்குக் கரம் கொடுத்திருக்கின்றது. அந்த உதவியை நாம் என்றும் நினைவில் கொள்வோம்.

பாரதியார் இந்தியாவில் பிறந்திருந்தாலும், தமிழுக்கு அவர் ஆற்றிய அளப்பரிய சேவையானது அவரை ஒரு பிராந்தியக் கவிஞராக அல்லாமல், உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் ஒரு ஆளுமையாக மாற்றியிருக்கிறது. எமது சிறுபராயத்தில் பேச்சுப் போட்டிகள் என்றால், பாரதியார் இல்லாத தலைப்புகளே இருக்காது என்னும் அளவுக்கு அவர் எம்முடன் ஒன்றிப்போயுள்ளார்.

நூற்றாண்டுகளுக்கு முன்னரே சமூக மாற்றத்துக்கான முற்போக்குச் சிந்தனைகளைத் துணிவுடன் விதைத்தவர் பாரதி. அவர் ஒரு சிறந்த கவிஞராக மட்டுமல்லாமல், இந்திய தேச விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்த ஒரு போராளியாகவும் திகழ்ந்தார். தனது கனல்தெறிக்கும் பாடல்கள் மூலம் மக்களிடத்தில் தேசபக்தியையும், விடுதலை உணர்வையும் ஊட்டினார்.

பல மொழிகளைக் கற்றறிந்த பன்மொழிப் புலவராகத் திகழ்ந்த அவர், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" எனத் தமிழுக்கு மகுடம் சூட்டினார். இவ்வுலகில் அவர் வாழ்ந்தது குறுகிய காலமே என்றாலும், அவர் ஆற்றிய பணிகள் மகத்தானவை. அதனால்தான் நூற்றாண்டு கடந்தும் அவர் இன்றும் நம்மால் போற்றப்படுகின்றார், என்றார்.

இந்நிகழ்வில் யாழ். தமிழ்ச் சங்கத்தின் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள், இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிளிநொச்சியில் முழுமையாக அழிவடைந்த பாலத்திற்கு பாலத்தை மீண்டும் அமைக்க 40 பேர் கொண்ட இந்திய இராணுவ பொறியில் பிரிவு ஒன்று கிளிநொச்சி வந்துள்ளது

**- ந.லோகதயாளன்**



கிளிநொச்சி மாவட்டத்தில் முழுமையாக அழிவடைந்த பாலத்திற்கு பதிலான பாலத்தை அமைப்பதற்காக 40 இந்திய இராணுவத்தின் பொருளியல்ப் பிரிவு ஒன்று கிளிநொச்சி வருகை தந்துள்ளது.

பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியில் அழிவடைந்த பாலத்திற்கு பதிலாக புதிய பாலத்தை அமைக்க 6ம் திகதி சனிக்கிழமை மாலை இந்த இந்திய இராணுவ பொறியியல் அணி வருகை தந்துள்ளது.

இவர்கள் அன்றைய தினம் தமது பணியை ஆரம்பிக்கவுள்ளமை தொடர்பில் மாவட்ட அரச அதிபர் எஸ்.முரளிதரனுடன் கலந்துரையாடினர். இப் பாலத்தை அமைக்கும் முயற்சி சுமார் ஒரு வார காலத்திற்குள் முழுமைப் படுத்தப்படவுள்ளது.

இப் பணிக்காக வந்த 40 இந்திய இராணுவ பொறியியல் பிரிவினரும் கொக்காவில் இராணுவ முகாமில் தங்கியுள்ளனர்என்பது குறிப்பிட்த்தக்கது.

# இயற்கை அனர்த்தம் காரணமாக நன்நீர் மீன்பிடியில் வடக்கில் 1,500 மில்லியன் இழப்பு

**- ந.லோகதயாளன்**



மட்டக்களப்பு வாவி

Image Source - www.tripadvisor.com

இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தத்தின்போது வடக்கு மாகாணத்தில் நன்நீர் மீன்பிடியாளர்களிற்கு ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக நெக்டா நிறுவனம் அறிக்கையிட்டுள்ளது.

நிக்வா புயலின் காரணமாக ஏற்பட்ட பாதிப்பில் அகப்பட்டு வடக்கின் 5 மாவட்டங்களிலும் நன்நீர் பிடியாளர்கள் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர்.

இதற்கமைய ன்னார் மாவட்டத்தில் 387 குடும்பங்கள் பாதிப் படைந்துள்ளதோடு வலைகள், 44 படகுகள் மற்றும் 110 சாதனங்களும் அழவடைந்துள்ளது. இதேபோன்று 27 கடல் அட்டைப் பண்ணைகளும் 04 இறால்ப் பண்ணைகள் மற்றும் 7 நண்டுப் பண்ணைகளும் அழிவடைந்துள்ளன. இதற்கமைய மன்னார் மாவட்டத்தில் 200 மில்லியன் ரூபா சொத்து அழிவடைந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 6 குளங்களில் தொழிலில் ஈடுபடும் 338 மீனவர்கள் பாதிப்படைந்துள்ளள, 173 கடல் அட்டைப் பண்ணைகள், 24 பாசி வளர்ப்பு இடங்கள் ஆகியவற்றுடன் 37 படகுகள் வலைகள் என்பன இழந்து 231 குடும்பம் பாதிப்படைந்துள்ளது. இதற்கமைய கிளிநொச்சியில் 180 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.


யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 33 கடல் அட்டை 33 பண்ணைகள் அழிவடைந்ததோடு 39 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இதனால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 10 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலே 13 குளத்தைச் சேர்ந்த 97 படகுகள் அழிவடைந்ததோடு அதிக வலைகளும் அள்ளிச் செல்லப்பட்டு விட்டது. இவற்றின் மூலம் 601 குடும்பங்கள் பாதிக்கப்பட்டதனால் முல்லைத்தீவில் 290 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் 9 குளத்தைச் சேர்ந்த 24 படகுகள், 371 வலைகள் அழிவடைந்தமையால் 147 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதேபோன்று கடல் அட டைப. பண்ணைகள் அழிவடைந்தமையால் யாழில் 35 மில்லியன் ரூபாவும், மன்னாரில் 270 மில்லியன் ரூபாவும், கிளிநொச்சியில் 188 மில்லியனும் அழிவடைந்துள்ளன.

4 இறால் பண்ணைகள் அழிவடைந்ததோடு, வளர்க்கப்பட்ட பாசியில் 50 தொன் இல்லை எனவும் பாசி ஒரு கிலோ 70 ரூபா வீதம் 60 மில்லியன் ரூபா என வடக்கில் மொத்தம் 1,500 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக நெக்டா அமைப்பு அறிக்கையிட்டுள்ளது.



கனடிய செய்திகள் Canadian News

# வரவு செலவுத்திட்டம் – 2025:

## கனடாவின் இறையான்மையை வலுப்படுத்துதலும் நமது எதிர்காலத்தைப் பாதுகாத்தலும் ஆகும்!



நமது வேகமாக மாறிவரும் உலகில், மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை நம்மால் கட்டுப்படுத்த முடியாது, ஆனால் நாம் இங்கே வீட்டில் என்ன செய்கிறோம் என்பதைக் கட்டுப்படுத்தலாம் - மேலும் கனடாவை வலுவாக உருவாக்க நாங்கள் தேர்வு செய்கிறோம்.

எமது வரவு செலவுத் திட்டம் 2025 இந்தத் தேர்வைப் பற்றியது. அத்துடன் நமது பொருளாதாரத்தை வலுவான, நம்பிக்கையான மற்றும் வளமான ஒன்றாக மாற்றுவதற்கான கனடாவின் புதிய அரசாங்கத்தின் திட்டம் இதுவாகும்.

"வரவு செலவுத் திட்டம் 2025 - நமது எதிர்காலத்திற்கான நமது அரசாங்கத்தின் துணிச்சலான பார்வையைப் உள்ளடக்கியுள்ளது: அடுத்த நான்கு ஆண்டுகள் மற்றும் அடுத்த நான்கு தசாப்தங்களுக்கு கனடியர்களுக்காக வேலை செய்யும் ஒரு வலுவான, இறையாண்மை மற்றும் மீள்தன்மை கொண்ட கனடா. மலிவு விலை, வீட்டுவசதி, காலநிலை, பாதுகாப்பு செயற்கை நுண்ணறிவு மற்றும் வர்த்தகத்தை நிவர்த்தி செய்ய நாங்கள் உருமாற்ற முதலீடுகளைச் செய்கிறோம். கனடாவின் எதிர்காலத்தை உலகளாவிய தலை எரிசக்தி வல்லரசாகவும் உருவாக்கும்போது கனேடிய வணிகங்களும் தொழில்துறையும் செழித்து வளர்வதை நாங்கள் உறுதிசெய்கிறோம்." என மார்க்கம் - தோர்ன்ஹில். தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு டிம் ஹார்ட்சன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "கனடாவின் புதிய நிதித் திட்டம் பொருளாதாரத்திற்கான ஒரு மூலோபாய வரைபடத்தை விட அதிகம். 2025 பட்ஜெட், பல் பராமரிப்பு, மருந்தகம் மற்றும் குழந்தை பராமரிப்பு உள்ளிட்ட மில்லியன் கணக்கான கனடியர்கள் நம்பியுள்ள முக்கிய திட்டங்களைப் பாதுகாக்கிறது, மேலும் கனடா குழந்தை நலன், தொழிலாளர் நலன் மற்றும் ஊனமுற்றோர் நலனைப் பெறும் மில்லியன் கணக்கானவர்களுக்கு இவற்றிற்கும் பிற முக்கியமான திட்டங்களுக்கும் நிதியளிப்பதை உறுதி செய்வதன் மூலம் உதவுகிறது. இந்த பட்ஜெட் கனடாவின் தேசிய பள்ளி உணவுத் திட்டத்தை நிரந்தரமாக்குகிறது, இது ஒவ்வொரு ஆண்டும் 400,000 குழந்தைகள் வரை பயனடைகிறது, எனவே எந்தக் குழந்தையும் பசியுடன் பாடசாலைக்குச் செல்ல வேண்டியதில்லை.

வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் கனடியர்களை ஆதரிப்பதில் உங்கள் அரசாங்கம் உறுதியாக உள்ளது, அதனால்தான் 2025 வரவு செலவுத் திட்டம் மதிப்புமிக்க திறன்கள் மற்றும் பணி அனுபவத்தைப் பெற விரும்பும் இளைஞர்களுக்கான கனடா கோடைக்கால வேலைகள் மற்றும் மூத்த குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் மூத்த குடிமக்களுக்கான புதிய எல்லைகள் திட்டம் போன்ற திட்டங்களை ஆதரிக்கிறது.

எமது வரவு செலவுத் திட்டம் மலிவு விலையை நேரடியாகச் சமாளிக்கிறது. நாம் அனைவரும் எதிர்கொள்ளும் அழுத்தத்தைக் குறைக்க கிட்டத்தட்ட 22 மில்லியன் கனடியர்களுக்கு நடுத்தர வர்க்க வரி குறைப்பை நாங்கள் வழங்குகிறோம். முதல் முறையாக வீடு வாங்குபவர்களுக்கு 1 மில்லியன் டாலர்கள் வரையிலான புதிய வீடுகளுக்கான ஜிஎஸ்ரி ஐயையும், 1.5 மில்லியன் டாலர்கள் வரையிலான வீடுகளுக்கு பகுதியளவு தள்ளுபடியையும் நாங்கள் நீக்கியுள்ளோம், எனவே வீட்டு உரிமை கனவு அடைய முடியாதது. மேலும், கனடியர்கள் தாமதமின்றி அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகளைப் பெறுவதை உறுதிசெய்ய கனடிய வருமான வரித் திணைக்களம் தானாகவே குறைந்த வருமானம் கொண்ட மூத்த குடிமக்கள் மற்றும் தனிநபர்களுக்கான வரி வருமானத்தை தாக்கல் செய்ய முடியும் என்பதை நாங்கள் உறுதிப்படுத்தினோம்.

நாடு முழுவதும் உள்ள மற்றும் மார்க்கம் தோர்ண்ஹில் போன்ற சமூகங்களில் வாழ்க்கையை மேம்படுத்த, மருத்துவமனைகள், நீர் அமைப்புகள், சாலைகள் மற்றும் போக்குவரத்து போன்ற அத்தியாவசிய உள்கட்டமைப்பை மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் 51 பில்லியன் டாலர்கள் முதலீடான Build Communities Strong Fund-I என்பதை நாம் உருவாக்கினோம், இது எங்களை சிறப்பாக இணைக்கும் மற்றும் எங்கள் சுற்றுப்புறங்களை சுத்தமாகவும் வலுவாகவும் வைத்திருக்கும்.



Build Canada Homes திட்டத்தை உருவாக்குவதன் மூலம் கட்டுமானத்தை இரட்டிப்பாக்குதல், மலிவு விலையை மீட்டெடுப்பது மற்றும் வீடற்ற தன்மையைக் குறைப்பதன் மூலம் வீட்டுவசதி விநியோக இடைவெளியை நிவர்த்தி செய்வதன் மூலம், வீட்டுவசதி விளையாட்டில் மீண்டும் இறங்குகிறோம். இந்த நிறுவனம் தலைமுறைகளாக அவர்கள் வைத்திருப்பதை விட வேகமாக வீடுகளைக் கட்டும், மரம் வெட்டுதல் போன்ற கனேடிய பொருட்களுக்கான தேவையை உருவாக்கும், மேலும் மார்க்கம் தோர்ன்ஹில் தொகுதி மற்றும் கனடாவின் ஒவ்வொரு மூலையிலும் மலிவு விலையில் வீடுகள் கட்டப்படுவதை உறுதிசெய்ய கட்டுமானத்தை நவீனப்படுத்தும்.


எங்கள் முழு அணுகுமுறையையும் ஆதரிப்பது எங்கள் அரசாங்கத்தின் புதிய Buy Canada திட்டக் கொள்கை: கனடாவின் முதல் விரிவான உத்தி, இது அதிக கனடிய எஃகு, அலுமினியம், மரம் வெட்டுதல் மற்றும் பிற உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகளைப் பயன்படுத்துவதை கட்டாயமாக்குகிறது, இதனால் நாங்கள் இறுதியாக எங்கள் சொந்த சிறந்த வாடிக்கையாளர்களாக முடியும். இதன் பொருள் பொது டாலர்கள் கனேடிய விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்தவும், உள்நாட்டுத் தொழில் மற்றும் புதுமைகளை ஆதரிக்கவும், எங்கள் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் பயன்படுத்தப்படும்.

வளர்ந்து வரும் உலகளாவிய உறுதியற்ற தன்மையின் சகாப்தத்தில், 2025 ஆண் கனடாவின் பாதுகாப்பில் முக்கியமான முதலீடுகளையும் செய்கிறது. பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு நிதியில் டாலர்கள் 81 பில்லியனுக்கும் அதிகமான தொகை கனேடிய ஆயுதப்படைகளுக்குத் தேவையான கருவிகள் இருப்பதை உறுதி செய்யும், அதே நேரத்தில் 1,000 புதிய ஆர்சிஎம்பி பணியாளர்கள் மற்றும் புதிய நிதி குற்ற நிறுவனம் நாடு முழுவதும் கனடியர்களைப் பாதுகாக்கும். ஏனெனில் கனடா தேசம் பலமானது என்றால் அது பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

இது ஒரு தலைமுறை திட்டம். பலமான இறையாண்மை மற்றும் மீள்தன்மை கொண்ட நாட்டை உருவாக்க ஜி7 அமைப்பை நாங்கள் வழிநடத்துகிறோம். எங்கள் சொந்த விதியை நாங்கள் கட்டுப்படுத்துவோம், கனேடிய குடும்பங்கள் மற்றும் வர்த்தக நிறுவனகங்களுக்கு நீண்டகால பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்போம், எனவே நாங்கள் பெருமையுடன் உண்மையான வடக்கில், வலிமையாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறோம்." எனத் தெரிவித்துள்ளார்.


**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடைய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்கூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.



**TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY**

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

**Mrs. K. Vasanthakumar** ஐ

Acupuncturist (R.A.C)

தொடர்புகொள்ளவும்.

**(416) 754-4024**

**5200 Finch Ave., East -- Suit #349**
**Scarborough, ON M1S 4Z5**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் மாவட்ட மக்கள் இயல்பு நிலைக்கு திரும்ப அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்

## கூட்டுறவு பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க பணிப்புரை



- எஸ்.ஆர்.லெம்பேட் (10-12-2025)

நாட்டில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ள அனர்த்தம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு துரித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும், கூட்டுறவு பிரதியமைச்சருமான உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் பாரிய அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளது.குறித்த இடர் பாடுகளில் இருந்து மாவட்டத்தையும் மக்களையும் மீள கட்டி யெழுப்புவது குறித்து விசேட கலந்துரையாடல் 10-12-2025 அன்று புதன்கிழமை மாலை 2 மணி அளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும், கூட்டுறவு பிரதியமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த விசேட கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேச செயலாளர்கள் பிரிவுகளிலும் புயல் மற்றும் வெள்ள அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.



இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார், இதன் போது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் அவர்களை தயார் படுத்தும் வகையில் சேதமாகியுள்ள வீதிகளை புனரமைத்து மக்கள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், வீதி அபிவிருத்தி திணைக்களம், பிரதேச சபைகளுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

மேலும் அசாதாரண காலநிலைக்கு முன்னர் மன்னார் மாவட்டத்தில் 35 ஆயிரம் ஏக்கர் நெற் செய்கை பயிரிடப் பட்டிருந்தது. இதில் சுமார் 20 ஆயிரம் நெற்பயிர்ச் செய்கை அசாதாரண காலநிலை காரணமாக அழிவடைந்துள்ளன. எனவே குறித்த நிலத்தில் மீளவும் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ளுவதற்குறிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இழப்பீடுகளை வழங்குதல், விதை நெல் மற்றும் பசளைகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் உரிய திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும் மன்னார் மாவட்டத்தில் அழிவடைந்த மாகாண, மத்திய, கமநல சேவை திணைக்களங்களுக்கு சொந்தமான குளங்களை தற்காலிகமாக புனரமைத்து நீரை தேக்கி வைப்பதற்கு ஏற்ற வகையில் உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள உரிய திணைக்களங்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்கள் தற்போது சொந்த இடங்களுக்கு மீள திரும்பி வருகின்றனர்.

இந்த நிலையில் அவர்களுக்கு தேவையான உதவிகள், உலர் உணவுகள் வழங்குதல், வீடுகளை துப்புரவு செய்வதற்கு 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவுகளை வழங்குதல் தொடர்பாக ஆலோசனைகளும் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும், கூட்டுறவு பிரதியமைச்சருமான உபாலி சமரசிங்க அவர்களால் வழங்கப்பட்டது.

மேலும் மாவட்டத்தில் உயிரிழந்த கால்நடைகள் குறித்தும் அதற்கான இழப்பீடுகள் வழங்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டதோடு, பதிவு செய்யப்பட்ட கால் நடையளர்களுக்கு மாத்திரமே இழப்பீடு வழங்குவதாக அரசாங்கம் அறிவித்துள்ள போதும் பதிவு செய்யப்படாத கால்நடை வளர்ப்பாளர்களுக்கும் இழப்பீடு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்வதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்வரும் 13ம் திகதி சனிக்கிழமை ஜனாதிபதி மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு வருகை தர உள்ளார்.அவரது வருகையின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகளையும், வழங்கினார்.

மேலும் அதிகாரிகள் மக்களின் பாதிப்புகள் குறித்த துல்லியமான தகவல்களை ஜனாதிபதியிடம் தெரிவிக்க வேண்டிய நிலை உள்ளது.

சகல விதமான பிரச்சனைகள் குறித்தும் உரிய அதிகாரிகள-ிடம் ஜனாதிபதி கேள்வி எழுப்பும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் உரிய முறையில் கிடைக்க வேண்டும். எனவே அதிகாரிகள் சகல விதமான தரவுகளுடன் ஜனாதிபதியில் கலந்துரையாடலில் கலந்து கொண்டு துல்லியமான பதிலை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் பிரதி அமைச்சர் முன் வைத்த மையும் குறிப்பிடத்தக்கது.

Thana Insurance Inc

T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.


Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

# புயலும் பின்னரும்

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -



புயல் அனுராசங்கத்தைப் பலப்படுத்தியிருக்கிறது. அனைத்துலக அளவிலும் உள்நாட்டிலும் அரசாங்கத்தைப் பலப்படுத்தத் தேவையான ஒரு மனிதாபிமானச் சூழல் உருவாகியிருக்கிறது. இந்த மனிதாபிமான அரசியல் சூழல் அல்லது நிவாரண அரசியல் சூழல் எனப்படுவது அதன் தர்க்கபூர்வ விளைவாக அரசாங்கத்தைப் பலப்படுத்தும்.

அனைத்துலக அளவில் பெரும்பாலான நாடுகள் வரிசைகட்டி நின்று உதவி செய்கின்றன. குறிப்பாக முதலில் உதவியதும் இந்தியா. அதிகம் உதவியதும் இந்தியாதான். தவிர வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களும் உதவுகிறார்கள். சில புலம்பெயர்ந்த தமிழர்களும் அரசாங்கத்துக்கு நிதி சேர்த்துக் கொடுக்கிறார்கள். அல்லது தாம் சேர்த்த நிதியை தாம் வாழும் நாட்டின் அரசாங்கத்துக்கு ஊடாகக் கொடுக்கிறார்கள்.

உள்நாட்டில் செழிப்பான ஒரு மனிதாபிமானச் சூழல் மேலெழுந்துள்ளது. தொண்டு நிறுவனங்கள், மத நிறுவனங்கள், சிறிய சமூக அமைப்புக்கள் என்று பல்வேறு வகைப்பட்ட அமைப்புகளும் தனி நபர்களும் தன்னார்வமாக முன்வந்து உதவிகளைச் சேகரித்து, தேவைப்படும் மக்களுக்குக் கொண்டு சென்று கொடுக்கிறார்கள். நிவாரணத்தைச் சேகரிக்கும்பொழுது உள்ளூர் வணிகர்களும் காசு உள்ளவர்களும் தங்களால் இயன்ற அளவுக்கு அள்ளிக் கொடுக்கிறார்கள். சிங்களப் பகுதி ஒன்றில் ஒரு முதிய பெண் தன்னுடைய பங்குக்கு தன்னிடம் இருந்த இரண்டு பனடோல் மாத்திரை அட்டைகளை அன்பளிப்பாகக் கொடுத்தது ஒரு நிகழ்ச்சியான சம்பவமாக சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டது.

அதேசமயம் தமிழ்ப் பகுதிகளில் தன்னார்வமாக இளையவர்களும் தொண்டு நிறுவனங்களும் நிவாரணங்களை சேகரித்துக் கொண்டு மலையகத்தை நோக்கிச் செல்கிறார்கள். புயல் ஓய்ந்த அடுத்தடுத்த நாட்களில் ஒரு பகுதியினர் தனித்துவிடப்பட்டிருக்கும் முல்லைத்தீவை நோக்கியும் வன்னியின் ஏனைய பகுதிகளை நோக்கியும் சென்றார்கள். அங்கே தங்களால் முடிந்த உதவிகளைச் செய்த பின் மலையயகத்தை நோக்கித் திரும்பினார்கள். வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் மலையகத்தை நோக்கி உதவிகள் செல்கின்றன. புயலுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழலானது தமிழ் சகோதரத்துவத்தை மேலும் பலப்படுத்தியிருக்கிறது.

முஸ்லிம்கள் தங்களுடைய மதக் கட்டமைப்புகளுக்கு ஊடாகவும் தொண்டு நிறுவனங்களுக்கு ஊடாகவும் பொருட்களை சேகரித்து பாதிக்கப்பட்ட மக்களை நோக்கிச் செல்கிறார்கள். தென்னிலங்கையில் பாதிக்கப்படாத பகுதிகளை சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளை நோக்கி தன்னார்வமாகத் திரண்டு செல்கிறார்கள். அரச கட்டமைப்புகள் உதவிக்கு வரும் அதேவேளை, மக்கள் தாங்களாக முன்வந்து தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து வருகிறார்கள்.

நீர்மட்டம் உயர்ந்ததனால் வான் கதவுகள் திறக்கப்பட்டு அதனால் வெள்ளம் கட்டுக்கடங்காது ஓடிய பகுதிகளில் வீதிகள், வீடுகள், பொது இடங்கள் போன்றவற்றில் கழி போல சேறு மூடிக்கிடக்கின்றது. சில இடங்களில் கால் புதையக் கூடிய அளவுக்கு சேறு. அதனை அரச உதவி வரும் வரை பார்த்துக் கொண்டிருக்காமல், அயலில் உள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தாங்களாக முன்வந்து அகற்றுகிறார்கள். தெருக்களிலும் வீடுகளிலும் பொது இடங்களிலும் உள்ள சேற்றைக் கழுவி அகற்றுகிறார்கள். முறிந்து விழுந்த மரங்களையும் குப்பைகளையும் சேகரித்து ஓரிடத்தில் குவிக்கிறார்கள்.

இதுவிடயத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒரே சமயத்தில் அரச கட்டமைப்புகள், அரசுசாரா கட்டமைப்புகள், தன்னார்வலர்கள், இவர்களோடு உதவிக்கு வந்த நாடுகளின் தொண்டர்கள், படையினர் மற்றும் வெளிநாட்டவர்கள் என்று எல்லாத் தரப்பும் இணைந்து அந்தப் பகுதியை துப்புரவாக்கும் காட்சி அற்புதமானது. சில இடங்களில் உல்லாசப் பயணிகளாக வந்த வெள்ளைக்காரர்களும் காணப்பட்டார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களே மக்களுக்கு உதவும் தன்னார்வ தொண்டுச் செயற்பாடுகளில் ஜேவிபியின் அடிமட்ட வலைப்பின்னல் பலமாகச் செயல்படுகின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அடித்தளமாக இருப்பது ஜேவிபி. அது அடிப்படையில் ஓர் இயக்கம். அடிமட்ட கிராமிய வலைப் பின்னலைக் கொண்ட ஓர் இயக்கம். எனவே அவர்களிடம் உள்ள அடிமட்ட வலையமைப்பு புயலுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழலை அரசாங்கத்துக்குச் சாதகமாகக் கட்டமைத்து வருகிறது.

இவ்வாறாக டித்வா புயலுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழல் என்பது ஒரு விதத்தில் அனுரவுக்குச் சாதகமானதாகவே காணப்படுகிறது. ஒருபுறம் நாட்டை நோக்கி உதவிகள் குவிக்கின்றன. இன்னொருபுறம், ஒரு பேரிடருக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழல் அதிகம் நெகிழ்ச்சியானதாகவும் உணர்வு பூர்வமானதாகவும் காணப்படுகிறது.

இது இயற்கைப் பேரிடர் ஒன்றுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழல். ஆனால் இங்கு இயற்கை மட்டும் பேரிடரை ஏற்படுத்தவில்லை. மனிதத் தவறுகளும் இதற்குக் காரணம் என்று எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுகின்றன. ரணில் விக்கிரமசிங்க இந்த அரசாங்கம் பதவியேற்ற புதிதில் இது ஓர் "எல்போர்ட்" அரசாங்கம் என்று நக்கலடித்திருந்தார். அனர்த்த காலமொன்றை முகாமை செய்ய இந்த அரசாங்கத்தால் முடியவில்லை என்று நிரூபிப்பதற்கு எதிர்க் கட்சிகள் முயற்சிக்கின்றன.

நுகேகொட பேரணிக்குப் பின் டித்வா புயலானது எதிர்க் கட்சிகளுக்கு அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு அதிகரித்த வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்துள்ளது. வழமைபோல எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை எதிர்ப்பதனை ஒரு மரபாகப் பேணுகின்றன என்று அரசுக்கு ஆதரவான அறிவுஜீவிகள் நியாயம் கற்பிக்கின்றார்கள். ஆனால் அது உண்மை அல்ல. எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் சிலவற்றை ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும். ஏற்கனவே முன்னெச்சரிக்கைகள் கிடைத்த போதிலும் அரசாங்கம் வருமுன் காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்ற குற்றச்சாட்டு உண்மையானதுபோல தெரிகிறது.

இந்திய வானிலை ஆய்வு மையம் புயல் தொடர்பாக நொவம்பர் 13 ஆம் திகதியே எச்சரித்திருந்தது. நவம்பர் 26வரை அனைத்துத் தகவல்களும் இலங்கையுடன் பரிமாறப்பட்டுள்ளன என்று "இந்தியன் எக்ஸ்பிரஸ்" இணையத்தளம் கூறுகிறது. அதுபோலவே தமிழக வானிலை முன்னறிவிப்பாளர்களில் ஒருவராகிய செல்வக்குமார், தன்னுடைய யூடியூப் தளத்தில் இதுதொடர்பாக இலங்கையை 24ஆம் திகதி எச்சரித்திருந்தார். குறிப்பாக முன்னெப்பொழுதும் ஏற்பட்டிராத வெள்ளப்பெருக்கும் மண் சரிவும் ஏற்படும் என்றும் அவர் எச்சரித்து இருந்தார். அதைவிட குறிப்பாக இந்த பேரிடரின் காரணமாக இலங்கை அரசாங்கம் அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்த வேண்டி வரலாம் என்றும் செல்வக்குமார் மிகத்துல்லியமாக எதிர்வு கூறியிருந்தார். அது மட்டுமல்ல தன்னுடைய முன்னெச்சரிக்கையை அரசாங்கத்திடம் கொண்டு சென்று சேர்ப்பிக்குமாறு கேட்டிருந்தார். அவருடைய முன்னெச்சரிக்கை அடங்கிய காணொளி 24 ஆம் தேதி வெளியிடப்பட்டது. இலங்கை வானிலை என்ற தலைப்பில் அது வெளியிடப்பட்டது.

அதேபோல, யாழ்ப்பாணத்தில் வசிக்கும், யாழ் பல்கலைக்கழக, புவியியல் துறையின் தலைவராகிய பேராசிரியர் பிரதீபராஜா ஒரு புயலைக் குறித்து ஏற்கனவே எச்சரித்திருந்தார். கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு முன்பு அதாவது செப்டம்பர் மாதத்தின் தொடக்கத்தில் அவர் அந்த எச்சரிக்கையை விட்டிருந்தார். அவர் வழமையாக தன்னுடைய முகநூல் தளத்தில் வானிலை அறிவிப்புகளை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறார்.

அவர் ஒரு புவியியல் துறை பேராசிரியர். இயற்கை அனர்த்தங்களைக் குறித்து எச்சரிப்பது அவருடைய உத்தியோகபூர்வ கடமை அல்ல. அதைச் செய்ய வேண்டியது வளி மண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் போன்றனதான். ஆனால் பிரதீபராஜா அதைத் தன்னார்வமாகச் செய்கிறார். இம்முறை பருவ மழையை முன்னிட்டு அவர் முகநூலில் பதிந்த நீண்ட முன்னெச்சரிக்கைகள் அடங்கிய பதிவு ஒன்றில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அதன்பின் மடமாகாண ஆளுநர் வேதநாயகன் அவரை தன்னுடைய அலுவலகத்துக்கு அழைத்து துறைசார் திணைக்களங்களின் பொறுப்பாளர்களையும் அழைத்து ஒரு கலந்தாலோசனை செய்தார்.

எனவே ஒரு பேரிடரைக் குறித்து முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என்று அரசாங்கம் கூறமுடியாது. இந்த முன்னெச்சரிக்கைகளை அரசாங்கம் உரிய பாரதூரத் தன்மையோடு உள்வாங்கியிருக்கவில்லை என்பதைத்தான் அது காட்டுகிறது.

பேராசிரியர் பிரதீபராஜா 130 ஆண்டுகளின் பின் இப்படி ஓர் அனர்த்தம் நிகழப் போகிறது என்று எச்சரித்திருந்தார். அந்த அடிப்படையில் நீர் தேங்கு பிரதேசங்களின் நீர் வரத்து அதிகரிக்கும் என்பதும் நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் கொள்ளளவைத் தாண்டி உயரலாம் என்றும் எச்சரிக்கப்பட்டிருந்தது. தென்னிலங்கையில், கம்பளையில் ஏற்பட்ட அழிவுகளுக்கு கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் ஒரே வேளையில் திறக்கப்பட்டமைதான் காரணம் என்று இப்பொழுது குற்றம் சாட்டப்படுகிறது.

இக்கட்டுரை எழுதப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பு ஜனாதிபதி அனுர சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அதிகாரிகளோடு நடத்திய உரையாடல் ஒன்றின் படி முன்னெச்சரிக்கைகள் போதிய பாரதூரத் தன்மையோடு அணுகப்படவில்லை என்பது தெரிகிறது என்று விமர்சகர் சுட்டிக் காட்டுகிறார்கள். வான் கதவுகளைத் திறக்க முன்பு அதனால் பாதிப்படையக்கூடிய மக்களுக்கு போதிய முன்னெச்சரிக்கை உரிய வேளையில் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை மேற்படி அதிகாரிகளுக்கும் அனுரவுக்கும் இடையிலான சந்திப்பு தொடர்பாக வெளிவந்த காணொளி நிரூபிப்பதாகவும் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

வான் கதவுகளை திறப்பதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்பு எச்சரிக்கை விடுக்கப்படுவதாக சம்பந்தப்பட்ட திணைக்கள பொறுப்பு அதிகாரி கூறுகிறார். 10 நிமிடங்கள் போதுமா என்று அனுர கேட்கிறார். சரியான கேள்வி. ஏனென்றால் வான் கதவுகளைத் திறப்பதற்கு 10 நிமிடங்களுக்கு முன் அறிவிப்பதால் மக்களைக் காப்பாற்ற முடியாது. நீர் பெருக்கெடுத்து ஓடும் வழிகளில் வாழும் மக்கள் 10 நிமிடங்களுக்குள் வீட்டைக் காலி செய்துவிட்டு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல முடியாது. குழந்தைகள், முதியவர்கள், உடல் வளங்காதவர்கள், கர்ப்பிணிகள்... என்று எல்லாத் தரப்புகளையும் பத்து நிமிடங்களுக்குள் அந்த இடத்திலிருந்து அகற்ற முடியாது.

இது சிங்களப் பகுதிகளில் மட்டும் நடக்கவில்லை. தமிழ்ப் பகுதிகளிலும் குறிப்பாக வவுனியாவிலும் அவ்வாறு மக்கள் பாதிக்கப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன. பாவற் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்ட போது அந்த வெள்ளம் கந்தன் குளத்தைச் சேர்ந்த மக்களை இடம் பெயர வைத்தது என்று அப்பகுதி மக்கள் கூறுகிறார்கள். அதிகரித்த நீர் வரத்துக் காரணமாக நீர்த்தேக்கங்களின் வான் கதவுகளைத் திறக்கும் போது, அதன் பின் விளைவுகளை முகாமை செய்வதற்கு, அரசாங்கம் முன்னெச்சரிக்கையோடு இருக்கவில்லை என்றும், வருமுன் காக்கும் நடவடிக்கைகளில் இறங்கவில்லை என்றும் பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் உண்டு.

எதிர்க்கட்சிகள் இதுபோன்ற குற்றச்சாட்டுகளை தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றன. எனினும், பேரிடருக்குப் பின்னரான மனிதாபிமான உதவிகளுக்கான சூழலானது, எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளை கூர்மையிழக்கச் செய்கின்றது. அதோடு அரசாங்கம் அறிவித்திருக்கும் இழப்பீட்டுத் தொகையும் மிகப்பெரியது. இதுவரையிலும் இருந்த அரசாங்கங்கள் இதுபோன்ற அனர்த்தங்களின் போது அறிவித்திராத பெரிய தொகை இழப்பீடு அது. இந்த இழப்பீட்டின்மூலம் அரசாங்கம் தன்னை ஏழைகளின் நண்பனாக மீண்டும் ஒரு தடவை நிரூபிக்க முயற்சிக்கின்றது. அரசாங்கம் அறிவித்திருக்கும் பெரிய அளவிலான இழப்பீட்டுத் தொகையானது மக்கள் அபிமானத்தை வென்றெடுப்பதற்கு உதவும். இதனாலும் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு எதிராக குற்றச்சாட்டுகளை அடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

எனவே புயலுக்கு பின்னரான அரசியல் சூழலைத் தொகுத்துப் பார்க்கும்போது, அது மனிதாபிமானத் தேவைகளை முன்நிறுத்தும் சூழலாக மேலெழுகிறது. இதனால் அனுர அரசாங்கம் எதிர்க்கட்சிகள் எதிர்பார்த்ததைப் போல பலவீனமடையவில்லை, மாறாக பலமடைந்திருக்கிறது என்றுதான் தோன்றுகிறது.



# பெண், பதவி, தங்கம் ஆகியவற்றிற்காக அநுரவிடம் மண்டியிடும் எம்.பி.க்கள்

**“சிறுபான்மையினங்களான தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாவலர்களாக, உரிமைப் போராளிகளாக இன உணர்வாளர்களாக தம்மைக் காட்டிக்கொள்ளும் பலரில் தற்போது இந்த 3 எம்.பி.க்களும் பெண்ணுக்காக, பதவிக்காக, தங்கத்திற்காக தமது கட்சி, கொள்கை, இலக்கு. உரிமை என்ற ஆடைகளைக் கழற்றி அநுர அரசுக்கு துதி பாடி அம்மணமாகத் தொடங்கியுள்ளனர்.”**

**------------------------------------------------------------ கே.பாலா -**

“அரசியலில் இன்றைய எதிரி நாளைய நண்பன், இன்றைய நண்பன் நாளைய எதிரி” என்பது பொது விதி. அதனைத்தான் நகைச்சுவை நடிகர் கவுண்டமணியும் தனது பேச்சு வழக்கில் “அரசியலில் இதுவெல்லாம் சாதாரணமப்பா” என்று கூறியிருப்பார். இந்த முன்னோட்டம் எல்லாம் இப்போது எதற்கு என்று கேட்டீர்களானால் இலங்கையில் தற்போதுள்ள ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திலும் சில எதிர்க்கட்சி எம்.பி.க்களும் இந்த “அரசியலில் இதுவெல்லாம் சாதாரணமப்பா” என்ற பொது விதியை கடைப்பிடிக்கத் தொடங்கி தமது கட்சி, கொள்கை, இலக்கு. உரிமை என்ற ஆடைகளைக் கழற்றி அம்மணமாகத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறாக அம்மண அரசியல் செய்யத் தொடங்கியுள்ளவர்களில் மூவர்தான் தற்போதைய அரசியல் களத்தில் முக்கியத்துவம் பெறுகின்றனர் .ஒருவர் ஜனநாயகத் தமிழ் தேசியக்கூட்டணியின் வன்னிமாவட்ட எம்.பி.யும் தமிழீழவிடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவருமான செல்வம் அடைக்கலநாதன். அடுத்தவர் சுயேட்சைக்குழு 17 இன் தலைவரும் யாழ்ப்பாண மாவட்டத்தின் எம்.பி.யுமான அர்ச்சுனா இராமநாதன். மற்றயவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான ஹிஸ்புல்லா. எதிர்கட்சிகளை சேர்ந்த இந்த மூவரிடையில்தான் இப்போது ஜனாதிபதி அநுரகுமாரவையும் அவரது ஆட்சியையும் புகழ்ந்து தள்ளுவதிலும் அதன் மூலம் அரசுக்கு கூஜா தூக்குவதிலும் “நீயா நானா” போட்டி ஏற்பட்டுள்ளது.

சரி இவர்கள் ஏன் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கும் அவரது அரசுக்கும் புகழ்மாலை சூடுகின்றனர்?. தற்போதைய ஆட்சி ஆகா, ஓகோ, அற்புதம் என வானளாவ புகழ்ந்து தள்ளுகின்றனர் என்று பார்த்தால் அதற்கு பின்னாலும் ஒரு “தற்காப்பு அரசியல்” அல்லது “சரணாகதி அரசியல்” இருப்பதனைக் கண்டு கொள்ள முடியும். இவர்கள் அந்தளவுக்கு தற்காப்பு, சரணாகதி அரசியலில் ஈடுபடுவதற்கான காரணம் என்ன? தமது மக்களின் உரிமைக்காக ஆயுத வழியில் போராடியமையா அல்லது அகிம்சை வழியில் போராடியமையா அல்லது மக்களுக்காக ஏதாவது சட்டத்தை மீறி செயற்பட்டார்களா அல்லது மக்களுக்காக குரல் கொடுப்பதற்காக இவர்களுக்கு ஏதாவது கொலை அச்சுறுத்தல்கள் உயிராபத்துக்கள் ஏற்பட்டுள்ளதால் அவ்வாறு தற்காப்பு அரசியலில் ஈடுபட்டு தம்மை பாதுகாக்க முயற்சிக்கின்றார்களா என்று பார்த்தால் அப்படி எந்த மண்ணும் கிடையாது.

இதில் முதலாவது தற்காப்பு அரசியல் போராளியான செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.யின் இந்த சரணாகதி அரசியலுக்கு காரணம் என்னவென்பதனைப் பார்ப்போம். ரெலோ தலைவரும் எம்.பி.யுமான செல்வம் அடைக்கலநாதன் சுரேஷ் என்பவருடன் தொலைபேசியில் உரையாடுகின்ற ஒரு குரல் பதிவு சமூக ஊடகங்களில் வெளியானது. குறித்த குரல் பதிவில் செல்வம் எம்.பியுடன் பல வருடங்களாக இருந்த யுவதி ஒருவர் காணாமல் போயுள்ளமை பற்றி பல்வேறு விடயங்கள் உரையாடப்படுவதுடன் செல்வம் அடைக்கலநாதன் சுரேஷ் என்ற நபருடைய உயிருக்கும் அச்சுறுத்தல் விடுக்கின்றார். அதாவது மீண்டும் அந்த யுவதியை தன்னிடம் ஒப்படைக்காது விட்டால் அல்லது அவரை வைத்திருக்கும் இடத்தை குறிப்பிடாது விட்டால் உன்னை உயிருடன் விடமாட்டேன் என செல்வம் எம்.பி எச்சரிக்கின்றார்.

இதனையடுத்து, சில நாட்களின் பின்னர் சுரேஷ் என்கின்ற அந்த நபர் அதாவது செல்வம் அடைக்கலநாதனின் கார் சாரதியான அந்த நபர் நீர்கொழுப்பு பகுதியிலே தவறான முடிவெடுத்து உயிரிழந்திருப்பதாக தகவல் வெளியானது. குறித்த நபர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளாரா அல்லது செல்வம் அடைக்கலநாதன் விடுத்த கொலை அச்சுறுத்தலை நிறைவேற்றினாரா என்ற சந்தேகங்கள் எழுந்த நிலையில் செல்வம் அடைக்கலநாதனுக்கு எதிராக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. மேலும், பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது, இந்நிலையில் அண்மைய தினங்களாக முன்வைக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களையடுத்து நடைபெற்ற ரெலோ கட்சியின் தலைமைக் குழு கூட்டத்திலும் அவரை பதவி விலகுமாறு வலியுறுத்தப்பட்டது.

இவ்வாறான நிலையில் செல்வம் அடைக்கலநாதன் கைது செய்யப்படும் நிலை ஏற்பட்டதையடுத்து தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்தார். கனடாவில் வசிக்கும் நபர் ஒருவர் தொலைபேசி ஊடாக தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக தனது முறைப்பாட்டில் அவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.யின் வாகனம் திடீரென தீப் பிடித்து எரிந்து நாசமானது இச்சம்பவம் வவுனியா, பட்டானிச்சி புளியங்குளம் பகுதியில் இடம்பெற்றது. இச் சம்பவத்தின் போது வாகனத்தில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.பயணிக்கவில்லை. இதனால் இந்த தீ விபத்துசம்பவம் கூட சாட்சியங்களை அழிப்பதற்கான திட்ட மிட்ட தீவிபத்தாக இருக்கலாம் என்ற சந்தேகங்கள் வெளியிடப்பட்டன.

இவ்வாறாக செல்வம் எம்.பி.க்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் வலுபெற்று வந்ததுடன் அவரின் மேலும் பல குரல்பதிவுகள் வெளியிடப்படும் என்ற அறிவிப்புகளும் வந்த நிலையில் செல்வம் எம்.பி. எவ்வேளையிலும் பொலிஸாரின் விசாரணைகளுக்குட்படுத்தப்படலாம், கைது செய்யப்படலாம் என்ற எதிர்பார்ப்புகள் எழுந்த நிலையிலேயே அவர் தனது கட்சி, கொள்கை, உரிமை, இலக்கு, கோஷம் எல்லாவற்றையும் “ஒரு யுவதிக்காக” கைவிட்டு தற்போது குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்தும் பொலிஸாரின் விசாரணைகள், கைதிலிருந்து தன்னை தற்காத்துக்கொள்ளவும் ஜனாதிபதி அநுரகுமாரவை புகழ்ந்து தள்ளுவதுடன் அவரது ஆட்சியையும் பாராட்டித் தள்ளுகின்றார். இதனை செல்வம் அடைக்கலந்தான் எம்.பி.யின் அண்மைய வரவு செலவுத்திட்ட பாராளுமன்ற உரைகளில் அவதானிக்க முடியும்.

அடுத்த தற்காப்பு போராளியானவர் பாம்புக்கு தலையையும் மீனுக்கு வாலையும் காட்டும் விலாங்கு மீன் போன்று தமிழ் மக்களுக்காக தமிழ் மொழியில் உணர்ச்சிபூர்வ கோபாவேச உரைகளையும் சிங்களவர்களை திருப்திப்படுத்த சிங்கள மொழியில் ஆட்சியாளர்களையும் இராணுவத்தினரையும் புகழ்ந்து தள்ளும் உரைகளையும் தமிழ் தேசிய அரசியல்வாதிகளை மிகவும் கீழ்த்தரமாக விமர் சிக்கும் உரைகளையும் ஆற்றிவரும் அர்ச்சுனா இராமநாதன் எம்.பி. இவர் எதற்காக சிங்கள மொழியில் அரசை, இராணுவத்தை புகழ்ந்து பேசி தன்னை தற்காத்துக்கொள்ள முற்படுகின்றார் என்று பார்த்தால் அதற்கு பின்னால் அவரின் எம்.பி. பதவியின் ஆயுள் காலம் தங்கியுள்ளதை காண முடியும்.

2024 ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் அரச மருத்துவ அதிகாரியான அர்ச்சுனா இராமநாதன் அப் பதவியிலிருந்து விலகாமல் தேர்தலில் போட்டியிட்டதாகவும், இது அரசியலமைப்புச் சட்டத்தின் 91(1)(e) பிரிவை மீறுவதாகவும் தெரிவிக்கப்பட்டு சமூக செயற்பாட்டாளர் ஓஷலா ஹேரத் என்பவரால் அர்ச்சுனாவிற்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது. இதில் அர்ச்சுனா பதவி விலகாமல் போட்டியிட்டமை உறுதி செய்யப்பட்ட நிலையில் அர்ச்சுனாவின் எம்.பி. பதவியை வறிதாக்கி அதாவது அர்ச்சுனாவை எம்.பி. பதவியிலிருந்து நீக்கும் தீர்ப்பு எந்த வேளையும் வெளிவரக்கூடிய நிலையுள்ளது. இந்நிலையில் தனது எம்.பி. பதவியை பாதுகாத்துக்கொள்ள சிங்கள மொழியில் அரசையும் இராணுவத்தையும் புகழ்ந்தும் தமிழ் தேசிய அரசியல்வாதிகளை இகழ்ந்தும் பேசும் தற்காப்பு அரசியலை இறுதி முயற்சியாக முன்னெடுத்து வருகின்றார்.

அடுத்தவர் இலங்கையின் “தங்க மகன்” ஆக மாறியுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான ஹிஸ்புல்லா. இந்த ஹிஸ்புல்லா போலித் தங்க ஒப்பந்தத்தில் 2 மில்லியன் டொலர் மோசடி செய்ததாக கானா நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன. ஹிஸ்புல்லா வழங்கிய முறைப்பாடடின் அடிப்படையில் மோசடிக்கு ஏற்பாடு செய்ததாக குற்றம்சாட்டப்பட்ட 11 சந்தேக நபர்களுக்கு கானா நாட்டின் அக்ரா வட்டார நீதிமன்றம் பிணை வழங்கியதாகவும் அந்த செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தன. தங்கத்தை வழங்குவதாக உறுதியளித்து பணத்தைப் பெற்றுக்கொண்டு, அதை வழங்கத் தவறியுள்ளதாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கானா ஊடக தகவல்படி, இந்த சந்தேக நபர்கள் மீது குற்றச் சதி, போலி வாக்குறுதிகள் மூலம் மோசடி செய்தல் மற்றும் மோசடி முயற்சி ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தொடரப்பட்டது. சந்தேக நபர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5 இலட்சம் கானா சேடி (Ghana Cedi) பிணைத்தொகை நிர்ணயிக்கப்பட்டது. இந்த சந்தேக நபர்கள், தங்கம் விற்பனை செய்வதாகக் கூறி அப்பாவி மக்களை ஏமாற்றும் ஒரு சர்வதேச மோசடிக் கும்பலின் ஒரு பகுதியினர் எனவும் நீதிமன்றத்துக்கு தெரிவிக்கப்பட்டது விசாரணைகளின்படி, 2023 ஆம் ஆண்டில், அல்மாமூடி சலே என்பவரும் அவரது கூட்டாளிகள், தங்கம் வழங்குவதாகக் கூறி, இந்த ஹிஸ்புல்லா எம்.பி.யிடம் 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை மோசடி செய்துள்ளனர். பணத்தைப் பெற்ற பிறகு, அவர்கள் உறுதியளித்தபடி தங்கத்தை வழங்கத் தவறியதுடன், ஹிஸ்புல்லாவுடனான அனைத்து தொடர்புகளையும் துண்டித்துள்ளனர்.

பின்னர், இந்த சந்தேக நபர்கள் மீண்டும் ஹிஸ்புல்லாவை தொடர்பு கொண்டு, 50 கிலோ தங்கம் விற்பனைக்கு இருப்பதாகக் கூறியுள்ளனர். மேலும், அந்தப் பரிவர்த்தனைக்கு சட்டப்பூர்வ தன்மையை வழங்குவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டுள்ளனர். இதனையடுத்து, உத்தியோகபூர்வ முறைப்பாடொன்று கிடைத்ததையடுத்து, கானா தேசிய பாதுகாப்புக் குழுவினர் கடந்த 16 ஆம் திகதி, வெய்ஜா என்ற இடத்தில் வைத்து இந்த 11 சந்தேக நபர்களையும் கைது செய்தனர். ஆனால் தங்க வியாபாரத்தில் ஹிஸ்புல்லாஹ் ஏமாற்றப்பட்டதாக கானா ஊடகங்களில் வெளிவந்ததாகக் கூறப்பட்டு, பல ஊடகங்களில் வெளியான செய்தியை அவரது ஊடகப் பிரிவு முற்றிலும் மறுத்துள்ளது. அந்தச் செய்தியில் எவ்விதமான உண்மைத்தன்மையும் இல்லை தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டது. இவ்விடயம் இலங்கையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது, இந்த தங்க மோசடி தொடர்பில் ஹிஸ்புல்லா எம்.பி. விசாரிக்கப்படலாம், கைது செய்யப்படலாம் என்ற எதிர்வு கூறல்கள் வலுத்த நிலையிலேயே தற்போது ஹிஸ்புல்லா எம்.பி. எதிர்க்கட்சியில் இருந்தாலும் ஜனாதிபதியையும் அமைச்சர்களையும் புகழ்ந்து பேசி அவர்களை குஷிப்படுத்தி தன் மீதான விசாரணைகளிலிருந்து தப்பிக்கும் தற்காப்பு அரசியலை முன்னெடுத்து வருகின்றார்.

சிறுபான்மையினங்களான தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாவலர்களாக, உரிமைப் போராளிகளாக இன உணர்வாளர்களாக தம்மைக் காட்டிக்கொள்ளும் பலரில் தற்போது இந்த மூவரும் பெண்ணுக்காகவும் பதவிக்காகவும் தங்கத்திற்காவும் அநுரகுமார அரசு முன்பாக மண்டியிடத் தொடங்கியுள்ளனர். இன்னும் எத்தனை பேர் இவ்வாறு “புலித் தோல் போர்த்திய நரி” களாக இருக்கின்றனர் என்பதனை போகபோகத்தெரிந்து கொள்ள முடியும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் செயற்பாடுகளை ஆரம்பித்த மற்றொரு தமிழ் அரசியல் கட்சி — தமிழ் தேசியம் சாராத தேசியக் கட்சியாக செயற்படும் என்றும் அறிவிப்பு!

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணத்தில் செயற்பாடுகளை ஆரம்பித்த மற்றொரு தமிழ் அரசியல் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் தமது கட்சியானது தமிழ் தேசியம் சாராத தேசியக் கட்சியாக செயற்படும் என்றும் அறிவித்துள்ளனர்.

அகில இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சியின் மக்கள் தொடர்பாடல் தலைமையகம் 11ம் திகதி வியாழக்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.



பிரபல வர்த்தகர் அருள் ஜெயந்திரனை செயலாளர் நாயகமாகக் கொண்டு, 456/1 வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை முன்புறமாக குறித்த அலுவலகம் இன்று முற்பகல் ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிபாளர் (ஆரம்பனிலை) றூபா உதயரட்ணத்தால் நாடா வெட்டி திறந்துவைக்கப்பட்டது.




கடந்த நான்கு ஆண்டுகளாக, அரசியல் ரீதியில் தனது மக்கள் பணியை முன்னெடுத்துவரும் குறித்த கட்சியின் செயளாளர் நாயகமான அருள் ஜெயந்திரனை தலைமையாகக் கொண்டு, செயற்பட்டுவரும் நிலையில், இன்று குறித்த மக்கள் தொடர்பாடலுக்காக தலைமை அலுவலகம் திறந்துவைக்கப்பது.

இதன்போது, தமிழ் பரப்பில் இருக்கும் பல்வேறு கட்சிகளுக்குள் முற்றிலும் மாறுபட்ட நோக்குடன், தமிழ் தேசியம் சாராத ஒரு தேசியக் கட்சியாக "இலங்கையை உலகத்தில் வாழ்வதற்கு சிறந்த நாடாக்குவோம்" என்ற இலக்குடன், அனைவருக்கும் சம உரிமை, ஜனநாயகமே முன்னுரிமை என்றவாறு தனது மக்கள் சேவையை முன்னெடுக்கவுள்ளதாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# சங்கானையில் 13 வயது சிறுமியை தவறான நடத்தைக்கு உட்படுத்தியவருக்கு விளக்கமறியல்!

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கானை பகுதியில், 13 வயதுச் சிறுமியை தவறான நடத்தைக்கு உட்படுத்திய சந்தேகநபர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் வேலைக்காக பாதிக்கப்பட்ட சிறுமியை அழைத்துச் செல்வதை வழக்கமாக கொண்டுள்ளார். இந்நிலையில் நீண்டகாலமாக அந்த சிறுமியை தவறான நடத்தைக்கு உட்படுத்தி வந்துள்ளார்.

இந்நிலையில் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு இது குறித்து முறைப்பாடு வழங்கப்பட்டது. இந்நிலையில் மானிப்பாய் பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் குறித்த சந்தேகநபரை கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபரை 10ம் திகதி அன்றையதினம் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# வட்டுக்கோட்டையில் நடைபெற்ற மகாகவி பாரதியின் பிறந்தாள் நிகழ்வு!



மகாகவி பாரதியாரின் 143வது பிறந்தாள் நிகழ்வானது 10ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள பாரதியார் சிலையடியில் நடைபெற்றது. இதன்போது மகாகவி பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தப்பட்டது.

கலாநிதி சிதம்பரமோகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மறவன்புலவு சச்சிதானந்தம், சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். சுப்பிரமணியன் 1882 டிசம்பர் 11 இல், சென்னை மாகாணத்தின் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் (தூத்துக்குடியில்) பிறந்தார்.

பெண் விடுதலை, சாதிய எதிர்ப்பு, சமத்துவம் என்பவற்றை வலியுறுத்தி இவர் கடுமையாக போராடினார். இவர் வழக்கமாக உணவளிக்கும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலின் லாவண்யா என்ற யானை, ஒரு நாள் இவர் தேங்காய் வழங்கியபோது, இவரைத் தாக்கியது. இந்தச் சம்பவத்தில் உயிர் பிழைத்த போதிலும், இதன் விளைவாக சில மாதங்களில் இவரது உடல்நிலை மோசமடைந்தது. 1921 செப்டம்பர் 11 அன்று அதிகாலை 1 மணியளவில், பாரதியார் இயற்கை எய்தினார்.

பல மொழிகளில் புலமை பெற்ற பாரதி தமிழ் மொழியின் மீது தீராத பற்றுக் கொண்டிருந்தார். இவரது படைப்புகள் அரசியல், சமூக, ஆன்மீகக் கருப்பொருள்களை உள்ளடக்கியதாக விளங்கின. பாரதி இயற்றிய பாடல்களும், கவிதைகளும் தமிழின் இலக்கியம், இசை மற்றும் அன்றாட வாழ்க்கையில் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்ற நாவலர் குருபூசை!



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 10.12.2025 அன்று புதன் காலை 8.30 மணிக்கு நாவலர் குருபூஜை இடம்பெற்றது.

கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதலாவதாக கலாசாலையில் எழுந்தருளி உள்ள நாவலர் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி வணக்கம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் அதிதி பேச்சாளராக சிவத்திரு விஷ்ணுகுமார் விஷ்ணுயன் கலந்துகொண்டார்.

அதிதிக்கான அறிமுக உரையினை இந்து மன்றக் காப்பாளர் கு.பாலசண்முகன் ஆற்றினார். கலாசாலை அதிபர் நிறைவுரை ஆற்றினார்.

அதிதிப் பேச்சாளர் முகாமைத்துவ குழுவினரால் பொன்னாடை போர்தியும் மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்.



# சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்




- எஸ்.ஆர்.லெம்பேட் (12-12-2025)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு 10ம் திகதி புதன்கிழமை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்தின் முன்பாக குறித்த கவனயீர்ப்பு போராட்டமானது அன்று இடம்பெற்றது.

இதன் போது காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார் தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் புகைப்படங்களை தாங்கியவாறும், நீதி கோரிய பதாகைகளை தாங்கியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்றாகும். இந்த மனித உரிமைகள் தினத்தில் எமது உறவுகள் எங்கே? எமது உறவுகளுக்கு நீதி இதுவரை கிடைக்கவில்லை என அவர்கள் வலியுறுத்தினார்கள்.

அத்துடன் அரசியல் கைதிகளுக்கு விடுதலை, பௌத்தமயமாக்களுக்கு எதிராகவும் குரல் கொடுத்ததோடு சர்வதேச நாடுகள் மனித உரிமை தினத்திலாவது தங்களுடைய துன்பங்களை புரிந்து கொண்டு தமக்கான தீர்வை பெற்றுத் தருவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதில் பாதிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார் பலரும் கலந்து கொண்டு கண்ணீர் மல்க இந்த போராட்டத்தில் ஈடு பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கனடியர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற எமது அரசாங்கம் அவர்களின் நல்வாழ்விற்காக சிரமங்களை எதிர்கொள்ள தயாராகவே உள்ளது"

## ஒட்டாவா நகரில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கனடிய பிரதமர் மார்க் கார்னி உற்சாகத்துடன் அறிவிப்பு









ஒட்டாவா நகரிலிருந்து சத்தியன் ஜெகன்

-----------------------------------------------

உலகின் சிறந்த நாடுகளில் ஒன்றான கனடாவை தங்கள் வாழ்விடமாகவும் சிறந்த வாழ்க்கை தமக்கு கிட்ட வேண்டும் எண்ண்ம் கொண்டவர்களாகவும் உள்ள கனடியர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற எமது அரசாங்கம் அவர்களின் நல்வாழ்விற்காக சிரமங்களை எதிர்கொள்ள தயாராகவே உள்ளது. எனவே நாம் பல அண்மைக்காலத்தில் பல சிரமங்களை எதிர்கொண்டாலும் எமது அமைச்சர்கள் மற்றும் அறிவு சார்ந்தவர்களின் முறையான செயற்பாடுகளினால் எமது தேசத்தின் பொருளாதாரம் மிகவும் ஆரோக்கியமான பாதையில் சென்று கொண்டிருக்கின்றது என்பதை நாமும் எமது மக்களும் அவதானிக்கின்றார்கள். எனவே பல நல்ல திட்டங்களை அமுல்செய்யவும் எமது மக்களிற்கு பல வசதி-களை செய்து கொடுக்கவும். கனடிய இராணுவத்தை ஒரு பலன் கொண்டதாக உயர்த்தவும் நெடுந்தூரப் பாதைகளை அமைக்கவும் பெருந்தொகைப் நிதியை நாம் ஒதுக்கியுள்ளோம்"""

இவ்வாறு ஒட்டாவா நகரில் 10ம் திகதி புதன்கிழமையன்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கனடிய பிரதமர் மார்க் கார்னி உற்சாகத்துடன் தெரிவித்தார். ஆயிரத்திற்கும் அதிகமாக ஆதரவாளர்களும் அபிமானிகளும் கலந்து கொண்ட மேற்படி நிகழ்வு அரச மண்டபம் ஒன்றில் அழகிய முறையில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது.




மேற்படி நிகழ்வில் தமிழ் பேசும் அமைச்சரான ஹரி ஆனந்தசங்கரி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் ஆகியோர் உட்பட பல அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டார்கள்.

அத்துடன் தமிழர் சமூகத்தைச் சேர்ந்த ரூபன் பாலச்சதிரன் (விஜயா நகைமாளிகை உரிமையாளர்) வர்த்தகப் பிரமுகர் சங்கர் நல்லதம்பி (நட்சத்திர ஹோட்டல் நிர்வாகி மற்றும் பங்காளர்), லோகன் லோகேந்திரலிங்கம் (கனடா உதயன் பத்திரிகை நிர்வாகி மற்றும் பிரதம ஆசிரியர்) ஆகியோரும் பிரமாண்டமான நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### International Medical and Health Organization celebrated their Donors in a Colouful Event

# சர்வதேச மருத்துவம் மற்றும் சுகாதார அமைப்பிற்கு நிதி வழங்கும் கொடையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு!














**International Medical and Health Orgnization** என்று அழைக்கப்பெறும் சர்வதேச மருத்துவம் மற்றும் சுகாதார அமைப்பிற்கு நிதி வழங்கும் கொடையாளர்களை கௌரவிக்கும் மற்றும் அவர்களுக்கு அமைப்பின் பணிகளை பற்றிய விபரங்களை எடுத்துரைக்கும் நிகழ்வு கடந்த 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று மார்க்கம் நகரில் உள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளன கேட்போர் கூடத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது.

மக்கள் மத்தியில் நன்கு அறியப்பெற்றவரான வைத்திய கலாநிதி வரகுணன் மகாதேவன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அமைப்பின் வளர்ச்சியிலும் நிர்வாகத்திலும் முக்கிய பங்கு வகிக்கும் பல அன்பர்கள் வைத்திய கலாநிதிகள் என ஆர்வத்துடன் கலந்து கொண்டவர்கள் அமைதியாக அமர்ந்திருந்து நிகழ்வில் பங்கெடுத்தனர். அங்கு உரையாற்றிய ஏனைய உ ரையாளர்கள் பயனுள்ள வகையில் தமது உரைகளை ஆற்றினார்கள். கலந்து கொண்டோர் பலர் தங்கள் கருத்துக்களை முன்வைத்து உரையாற்ற மேற்படி நிகழ்வு பயனுள்ள ஒன்றாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

உங்கள் உடல் வலிகளிலிருந்தும் தசைப் பிடிப்பு காரணமான உபாதைகளிலிருந்தும்
தகுந்த சிகிச்சை மூலம் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்...

# MiracleHealth

ஸ்காபுறோ நகரில்
3000 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2V1
என்னும் விலாசத்தில் இயங்குகின்றது.
*(Scarborough General Hospital அருகில்)*

Meet Our Team



Physiotherapy • Massage Therapy • Counselling • Ayurvedic Therapy • Acupuncture • IV Nutrition Therapy





We are accepting new patients.

தமிழிலும் உரையாடும் வசதிகள் உள்ளன.

**Phone:**
**416.289.4444**

# உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?



## Legalize your basement now!

* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets



**Coverall Group Inc.**

416-706-8160 OR 416-893-3216

Carefirst Family Health Team

# Carefirst Family Health Team

**Accepting New Patients**
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24



## Markham Green Borough Seniors Wellness Club clebrates 10th Anniversary

# மார்க்கம் நகரத்தில் இயங்கிவரும் Green Borough Seniors Wellness Club மூத்தோர் அமைப்பு தனது 10வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது


















மார்க்கம் நகரத்தில் திருமதி செல்வா அருள்ராஜசிங்கம் அவர்கள் தலைமையில் வெற்றிகரமாக இயங்கிவரும் **Green Borough Seniors Wellness Club** மூத்தோர் அமைப்பு தனது 10வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் சிறப்பான ஒரு நிகழ்வை கடந்த 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மார்க்கம் நகரத்தில் உள்ள விழா மண்டபம் ஒன்றில் நடத்தியது.

அழைக்கப்பெற்ற அரசியல் பிரதிநிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன்-மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி மற்றும் மாநகரசபை உறுப்பினர் நீதன் சண்முகராஜா ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரைகளை வழங்கினர். பிரதம விருந்தினராக அழைக்கப்பெற்றிருந்த எழுத்தாளரும் வைத்திய கலாநிதியுமான போல் ஜோசப் அவர்கள் அங்கு கூடியிருந்த சபையோருக்கு பயனுள்ள கருத்துக்ளை எடுத்துரைத்து விடைபெற்றார்.

இந்த **Green Borough Seniors Wellness Club** மூத்தோர் அமைப்பின் உறுப்பினர்களான ஆண்களும் பெண்களுமாக வழங்கிய கலை நிகழ்ச்சிகள் சபையோரை மகிழ்ச்சியில் ஆழ்த்தின.

**Green Borough Seniors Wellness Club** மூத்தோர் அமைப்பின் தலைவி திருமதி செல்வா அருள்ராஜசிங்கம் அவர்களை கௌரவிக்கும் வகையில் அமைப்பின் நிர்வாக சபையினரும் அங்கத்தவர்களும் தொண்டர்களும் பாராட்டுக் கேடயம் மற்றும் மாலை ஆகியவற்றை வழங்கி அவரது பணிகளைப் பாராட்டி உரையாற்றினார்கள்.

ஒரு நிறைவான வெற்றிவிழாவைக் கண்டு களித்த மகிழ்ச்சியோடு அனைவரும் இராப்போசன விருந்தருந்தி இல்லம் ஏகினர்.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# Markham Event Palace

## உங்கள் கனவுகளை விழாவாக நடத்தும் இடம்!



பிறந்தநாள் கொண்டாட வேண்டும்!

திருமண மகிழ்வை நெஞ்சில் நிற்கும் நினைவாக மாற்ற வேண்டும்!

அல்லது உங்கள் வீட்டு எந்தவொரு நிகழ்வாக இருந்தாலும், நியாயமான விலை, அழகான சூழல், மனநிறைவான சேவையுடன் நடத்த மிகச் சிறந்த, இடம் — Markham Event Palace!

ஒலிச் — ஒளி வசதிகள்

பரந்த வாகனத்தரிப்பிடம் உள்ளிட்ட உங்கள் விழாவை சிறப்பாக்கும் அனைத்து வசதிகளும் உண்டு!

4345 14th Avenue, Markham

உங்கள் நிகழ்வை சிறப்பாக மாற்ற அழையுங்கள்

**Raj- 416-984-9633**

Email – markhameventplace@gmail.com

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கையில் பேரழிவால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பாக அரசாங்கம், ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றின் புள்ளிவிபரங்களுக்கு இடையே காணப்படும் முரண்!

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி உயிரிழந்த 600க்கும் மேற்பட்டவர்களில் எத்தனை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளனர் என்பது குறித்து இன்னும் துல்லியமான தகவல்கள் இல்லை எனக் கூறும் நாட்டின் முன்னணி ஆசிரியர் சங்கம், இது தொடர்பாக அரசாங்கமும் ஐக்கிய நாடுகள் சபையும் அளித்த புள்ளிவிபரங்களுக்கு இடையே இலட்சக்கணக்கான வித்தியாசம் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளது.

"இந்தப் பேரழிவு ஏற்பட்டு ஒரு வாரம் ஆகிறது. ஏற்கனவே துல்லியமான தகவல்கள் எதுவும் இல்லை என்பது எங்களுக்குத் தெரியும். எத்தனை ஆசிரியர்கள் தங்கள் உயிர்களை இழந்துள்ளனர்? அல்லது எத்தனை சிறுவர்கள்? இது இன்னும் கணக்கிடப்பட்டு வருகிறது. இன்னும் இறுதி எண்ணிக்கை இல்லை," என, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார்.

பேரழிவால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை தொடர்பாக யுனிசெப்பின் புள்ளிவிவரங்களுக்கும் கல்வி அமைச்சிக்கும் இடையே இலட்சக்கணக்கான வித்தியாசம் இருப்பதாக கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய தொழிற்சங்கத் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இந்த சம்பவம் நடந்தவுடன், இலங்கையில் 275,000 சிறுவர்கள் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டுள்ளதாக யுனிசெப் தெரிவித்தது. இருப்பினும், கல்வி அமைச்சின் செயலாளர் ஊடகங்களுக்கு சுமார் 100,000 சிறுவர்கள் மாத்திரமே பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்."

பேரழிவால் பாதிக்கப்பட்ட 1.4 மில்லியன் மக்களில் 275,000க்கும் மேற்பட்ட சிறுவர்கள் இருப்பதாக டிசம்பர் தொடக்கத்தில் எச்சரித்த இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், உண்மையான எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என்ற அச்சத்தை வெளிப்படுத்தியது.

கல்வி அமைச்சின் கீழ் செயல்படுத்தப்படும் சுரக்சா காப்புறுதித் திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு எவ்வாறான நிவாரணம் வழங்கப்படுகிறது என்பதை விளக்குமாறு மூத்த ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் கல்வி அதிகாரிகளிடம் கோரியுள்ளார்.

"எவ்வாறெனினும், கல்வி அமைச்சின் தரப்பை எடுத்துக் கொண்டால், இப்போது இந்த சிறுவர்களின் தரப்பிலிருந்து, ஜனாதிபதி நிதியிலிருந்து இருபத்தைந்தாயிரம் ரூபாய் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்போது மொத்தத் தொகை அதுதான். சிறுவர்களுக்கு ஒரு சுரக்சா காப்புறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதை நாம் அறிவோம். கல்வி அமைச்சின் கீழ் தான் சுரக்சா காப்புறுதி செயல்படுத்தப்படுகிறது. இப்போது, சுரக்சா காப்புறுதியின் ஊடாக இந்த பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் குறித்து இதுவரை எந்த தெளிவுபடுத்தலும் இல்லை."

# 41 வருடங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு, ஒதியமலை கிராமத்தில்கொல்லப்பட்ட 32 தமிழர்கள் நினைவுகூரப்பட்டனர்



நாற்பத்தொரு ஆண்டுகளுக்கு முன்பு அரசாங்க ஆயுதப் படைகளால் கொல்லப்பட்டு இன்னும் நீதி கிடைக்காத 32 தமிழ் கிராமவாசிகளுக்கான நினைவஞ்சலி நிகழ்வு முல்லைத்தீவு, ஒதியமலை கிராமத்தில் நடைபெற்றது.

டிசம்பர் 2, 1984 அன்று முல்லைத்தீவில் உள்ள ஒதியமலை கிராம அபிவிருத்தி மண்டபத்திற்கு 32 நிராயுதபாணியான தமிழ் கிராமவாசிகள் வரவழைக்கப்பட்டு அரச இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

படுகொலை நடந்த இடத்திற்கு எதிரே கட்டப்பட்ட நினைவுச் சின்னத்திற்கு பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் டிசம்பர் 2, 2025 செவ்வாய்க்கிழமை மலர் தூவி, விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

இறந்தவர்களின் ஆத்மசாந்திக்காக கிராமத்தில் உள்ள பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடும் இடம்பெற்றது.

தொடர் கொலைகள், 1984 டிசம்பர் தொடக்கத்தில் இருந்து பதினைந்து நாட்களுக்குள் முல்லைத்தீவு - திருகோணமலை மாவட்ட எல்லையில் உள்ள பல தமிழ் கிராமங்களை குறிவைத்து நடத்தப்பட்ட தொடர் கொலைகளில் ஒதியமலை படுகொலையும் ஒன்றாகும்.

தாக்குதல் நடத்தப்பட்ட மற்ற தமிழ் கிராமங்கள் கோகிலை, தென்னமரவாடி, அமராவயல், கொக்குத்துடுவாய், ஆலம்பில், நாயாறு, குமுளமுனை மற்றும் மணலாறு.

அப்போது நாடாளுமன்றத்தில் இருந்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி எம்.பி.க்கள் இந்தப் படுகொலைகளின் நோக்கம் சிங்களக் குடியேற்றம் என்று சுட்டிக்காட்டினர்.

படுகொலையின் போது இப்பகுதியில் தளபதியாக இருந்தவர் பிரிகேடியர் ஜனக பெரேரா, பின்னர் மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற்றார். தாக்குதலுக்குப் பிறகு நிறுவப்பட்ட சிங்களக் குடியிருப்புகளில் ஒன்று ஜனகபுரா என்று அழைக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வடமத்திய மாகாண முதலமைச்சர் பதவிக்கு 2008 அக்டோபரில் போட்டியிட்ட மேஜர் ஜெனரல் ஜனக பெரேரா, அனுராதபுரத்தில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பேரணியில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

# இலங்கையின் அண்மைய பேரழிவு காலத்தில் பொலிஸ் காவலிலிருந்த ஒரு நபர் மரணம்!



கிழக்கு மாகாணத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் பொலிஸ் காவலில் இருந்தபோது அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளதாகபொலிஸார் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட அதே நாளில், தான் பொலிஸாரால் தாக்கப்பட்டதாக, தனது புதல்வர் தன்னிடம் கூறியதாக தாய் தெரிவிக்கின்றார்.

மட்டக்களப்பு, சின்ன உப்போடையைச் சேர்ந்த 23 வயது சிவநேசராசா ரினோசன், பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டியைத் திருடிய குற்றச்சாட்டில், டிசம்பர் 2, 2025 அன்று மட்டக்களப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

டிசம்பர் 3 ஆம் திகதி அவர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவர், விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட ரினோசன், டிசம்பர் 5 ஆம் திகதி, திடீர் உடல்நலக்குறைவு காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.



ஐஸ் போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்பட்ட சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அவர் உயிரிழந்ததாக டிசம்பர் 7 ஆம் திகதி பொலிஸாரால் ரினோசனின் உறவினர்களுக்குத் தெரிவிக்கப் பட்டது.

அன்றைய தினம், மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தின் முன்பாக கூடிய ரினோசனின் உறவினர்கள், பொலிஸார் தமது உறவினரை அடித்துக் கொலை செய்ததாகக் கூறி, பொலிஸாரக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தனது மகன் கைது செய்யப்பட்ட டிசம்பர் 2 ஆம் திகதி இரவு, அவருக்கு உணவு கொண்டுச் சென்றதாகவும், தன்னை பொலிஸார் தாக்கியதாக, இதன்போது தனது மகன் தன்னிடம் தெரிவித்ததாகவும், உயிரிழந்த இளைஞரின் தாய் குறிப்பிடுகின்றார்.

"என்னுடைய பிள்ளைக்கு ஒரு நியாயம் கிடைக்க வேண்டும். எந்த காரணத்திற்காக கைது செய்தாலும் அடிக்கக்கூடாது. என்னுடைய பிள்ளையை கொலை செய்துவிட்டார்களே. நான் இரவு 7 மணிக்கு நான் இட்லி கொண்டுச் சென்று கொடுத்தேன். என்னை அடிக்கின்றார்கள் என்னை வெளியில் எடுங்கள் எனச் சொன்னான்."

டிசம்பர் 3 ஆம் திகதி காலை, ரினோசன் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது, அவர் உணர்வின்றி காணப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

"மறுநாள் காலையில் நான் பார்த்தபோது அவன் உணர்வின்றி இருந்தான். உடைகள் மாற்றும்போது தட்டிப் பார்த்தேன். தட்ட வேண்டாமென கூறினார்கள்."

இலங்கை பொலிஸார் கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் காவலில் இருந்தவர்களை அடித்துக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

ரினோசனின் பொலிஸ் காவல் மரணம் குறித்து பொதுப் பாதுகாப்பு அமைச்சோ அல்லது பொலிஸோ உத்தியோகபூர்வமாக எவ்வித அறிக்கையையும் வெளியிடவில்லை.

# யாழ்ப்பாணத்தில் 25 ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்காததால் மாணவன் முறைப்பாடு — நடவடிக்கையை ஆரம்பித்த மனித உரிமைகள் ஆணைக்குழு!




அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வீட்டுக்கானதா அல்லது நபருக்கானதா என்ற விளக்கத்தை எழுத்து மூலமாக வழங்குமாறு யாழ்.ப்பாணம் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் கோரியுள்ளது.

இரண்டு நாட்களுக்குள் எழுத்துமூலம் பதில் வழங்குமாறு காலக்கெடு குறித்து கடிதம் அனுப்பியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, 10ம் திகதி அன்றைய தினம் புதன்கிழமை மாணவன் ஒருவர் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற 25000 ரூபாய் கொடுப்பனவுக்கு வெள்ளத்தில் சிக்குண்ட தமது வீடு புறக்கணிக்கப்பட்டு விட்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாட்டை பதிவு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம், "அரசாங்கத்தின் 25000 ரூபா நிவாரணத் தொகை வீட்டுக்கானதா அல்லது தனிநபருக்கானதா" என்ற விளக்கத்தை இரு நாட்களுக்குள் எழுத்து மூலம் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு சண்டிப்பாய் பிரதேச செயலாளரை கேட்டுக் கொண்டுள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு யாழ்ப்பாணம் வர்த்தக சங்கம் உதவி!



வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மக்களுக்கு வழங்குவதற்கு ஒரு தொகுதி பாய், படுக்கை விரிப்புகள் மற்றும் நுளம்பு வலைகள் என்பன யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தினால் 11ம் திகதி புதன்கிழமை அன்றைய தினம் (11.12.2025) மு.ப. 11.00 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபனிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது அரசாங்க அதிபருக்கும் வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகளுக்குமிடையிலான கலந்துரையாடலின் போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களின் தேவைப்பாடுகளை மேலும் சாதகமாக பரிசீலித்து வழங்குவதாகவும், ஏனைய ஒருங்கிணைந்த செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் வர்த்தக சங்கம் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு. பா. ஜெயகரன், பிரதம கணக்காளர் திரு. எஸ். கிருபாகரன், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி. உ. தர்சினி, அனர்த்த முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர் திரு. ரி.என். சூரியராஜா, வர்த்தக சங்கத்தின் தலைவர் திரு. ஜனத்குமார் மற்றும் சங்கத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்ற "கலைமலர்" சஞ்சிகை வெளியீட்டு விழா!

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கலைமலர் சஞ்சிகை வெளியீட்டு விழா 10.12.2025 புதன்கிழமை காலை கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெற்றது.

அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராசா கலந்துகொண்டு சஞ்சிகையினை வெளியிட்டு வைத்தார்.

சஞ்சிகையின் முதல் பிரதியை கலாசாலையின் முன்னாள் அதிபர் வீ.கருணலிங்கம் பெற்றுக்கொண்டார். கலைமலர் சஞ்சிகையின் பதிப்பாசிரியரும் விரிவுரையாளருமாகிய வே.சேந்தன் பதிப்பாசிரியர் உரை ஆற்றினார். கலாசாலையின் பிரதி அதிபர் க. செந்தில்குமரன் நன்றியுரை ஆற்றினார். ஆங்கில நெறி ஆசிரிய மாணவி தர்மினி சம்பத்குமார் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் முன்னாள் உபஅதிபர் சத்தியா ரஞ்சிற், முன்னாள் விரிவுரையாளர்களான வ.சி.குணசீலன், சரா புவனேஸ்வரன், மு.ஜெயகுமாரி மற்றும் முன்னாள் ஆசிரிய மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

102 வருட கலாசாலை பாரம்பரியத்தில் இது 49 ஆவது சஞ்சிகை ஆகும். 240 பக்கங்களுடன் இச் சஞ்சிகை வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தினால் இந்தியப் பிரதமருக்கு மகஜர்!




அண்மைய நாட்களாக வடமாகாணத்தின் மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு கடற்பரப்புகளுக்குள் அத்துமீறி உள் நுழையும் இந்தியாவின் பாண்டிச்சேரி பகுதி இழுவைமடி படகுகளினால் வடமாகாண மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படும் செயற்பாடு வடக்கு கடற்பரப்பில் அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் இந்திய இழுவைமடி படகுகளால் ஏற்படும் பிரச்சனைகள் சம்மந்தமாக இந்தியப் பிரதமருக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்படவுள்ளது.

யாழ். இந்திய துணைத்தூதுவர் சாய் முரளியிடம், வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தினர் இந்த மகஜரினை 10ம் திகதி புதன்கிழமை அன்று மாலை 3.30 மணிக்கு இந்திய தூதரகத்தில் வைத்து கையளித்தனர்.

# வடமராட்சி கிழக்கில் ஏற்படும் போக்குவரத்து பிரச்சனைகளுக்கு வெகு விரைவில் தீர்வு காணப்படும் என்கிறார் ரஜீபன் எம்.பி!



வடமராட்சி கிழக்கு பகுதியில் ஏற்படும் போக்குவரத்து பிரச்சனைகளுக்கு வெகு விரைவில் ஒரு தீர்வினை கொண்டு வருவோம் என பாராளுமன்ற உறுப்பினரும், வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி குழு தலைவருமான ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் 10ம் திகதி புதன் கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், யாழ்ப்பாணத்தில் பல பிரச்சனைகளையும் கொண்டதும், அபிவிருத்தியில் பின்தங்கிய பிரதேசமாக வடமராட்சி கிழக்கு காணப்படுகின்றது. இவ் பிரதேசத்தில் பல அபிவிருத்திகளை செய்யவேண்டிய கடமையில் நாம் உள்ளோம்.

முக்கியமாக அண்மைக்காலமாக வடமராட்சி கிழக்கில் அரச மற்றும் தனியார் பேருந்துகள் தமது பணியினை ஒழுங்காக செய்வது இல்லை மற்றும் பரீட்சை காலங்களில் பேருந்துகள் இடையில் பழுதடைந்து நிற்பது போன்ற செயற்பாடுகள் அதிகரித்து செல்கிறது.

இதற்கான தீர்வினை வெகுவிரைவில் நாம் எடுப்போம். அதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகிறது. இவ் பிரதேசத்தில் அதிகளவான தொழில் முனைவோர்களை கொண்டு வந்து இப் பிரதேசத்தின் அபிவிருத்தியை ஊக்குவிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மன்னார்முசலியில் இடர் நிலையின் போது உரிய கடமையை செய்யவில்லை

இலங்கை செய்திகள் Sri Lanka News

## முசலி பிரதேச செயலாளருக்கு எதிராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிப்பு

மன்னார் நிருபர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (11-12-2025)

நாட்டில் ஏற்பட்ட புயலின் தாக்கம் காரணமாக மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பாரிய பாதிப்புகள் ஏற்பட்ட போதும் முசலி பிரதேச செயலாளர் மக்களுக்கு உரிய பணியை முன்னெடுக்கவில்லை என்றும், இரவு பகல் பாராது கடமையை முன்னெடுத்த கிராம அலுவலர் ஒருவருக்கு எதிராக பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் 11ம் திகதி அன்றையதினம் வியாழக்கிழமை முசலி பிரதேச அமைப்புக்கள் இணைந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.


நாட்டில் ஏற்பட்ட டித்வா புயலின் தாக்கம் காரணமாக மன்னார் மாவட்டமும் பாதிக்கப்பட்ட நிலையில் மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பாரிய பாதிப்புகள் ஏற்பட்டது.

எனினும் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வேப்பங்குளம், 4ம் கட்டை, மருதமடு, பிச்சைவானிபநெடுங்குளம் போன்ற கிராமங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டது.

குறித்த கிராமங்களுக்கு தேவையான உடனடி அடிப்படை தேவைகளை வழங்குவதில் முசலி பிரதேச செயலாளர் அசமந்தமாக செயல் பட்டமை தொடர்பில் மக்களால் சுட்டிக்காட்டப்பட்டு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் இடம் குறித்த பிரதேச செயலாளருக்கு எதிராக வேப்பங்குளம் கிராம பள்ளி வாயில் நிர்வாகம், கிராம அபிவிருத்தி அமைப்பு, விவசாய அமைப்பு, இளைஞர் அமைப்பு என 10க்கும் மேற்பட்ட அமைப்புகள் இணைந்து அன்று வியாழக்கிழமை (11) மன்னார் மாவட்ட செயலகத்தில் வைத்து மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளித்துள்ளனர்.

இதேவேளை குறித்த கிராமத்தின் கிராம அலுவலர் அனர்த்தம் ஏற்பட்ட தினத்தில் இருந்து இரவு பகலாக மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்ததுடன் குறித்த கிராம சேவகருக்கு தண்டனை இடமாற்றம் வழங்கப்பட்டமைக்கு எதிராகவும் கண்டனம் தெரிவித்து அரசாங்க அதிபருக்கு தெளிவுபடுத்தியது டன் மீண்டும் கிராம சேவகராக அவரையே தமது கிராமத்திற்கு கடமைக்கு அமர்த்துமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டதோடு தமது கோரிக்கை அடங்கிய மகஜரையும் கையளித்துள்ளனர்.



உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva
416-706-8160 OR 416-893-3216


Radha
Since 1972
RADHA AUTO
வங்கியால்
உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை
விற்பது
எமது விசேடத்திறன்
RADHA
416.412.3838
We sold Austin Cambridge & Morris Oxford in Sri Lanka
We are selling Lexus, Mini Vans, Honda & Toyota in Canada
மிகத் தரமான
கார்களை, குறைந்த விலையில்,
நாணயமான சேவையுடன் வாங்கிட
ஒருமுறை அழையுங்கள்...
2250 Markham Road
Scarborough ON M1B 2W4
(Markham & Finch)


TK DESIGN STUDIO
Architecture | Interior | Graphics
Our Services
• Architectural Design & Solutions
• Interior Design & Material Selection
• Graphic Designing (Posters, Invitations, Video Ads)
• 2D Planning & 3D Visualization
• Resume & Logo Design
Contact: Tel: +1(942) 380-1165
Email: tkdesignstudio03@gmail.com
Instagram: @tkdesignstudio1



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1176

## சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில்

### உடுப்பிட்டி

தேரில் எழுந்தருளுகின்ற மூர்த்தியும், சம்உறார மூர்த்தியாகவே தேரில் இவர்ந்தருளுகின்றார். இக்காரணத்தினாலேயே தேரில் எழுந்தருளும் போது, சுவாமிக்குச் சிவப்பு நிறமான பட்டுவகைகளையும், மலர் மாலைகளையும் அணிவிக்கும் வழக்கம் காணப்படுகின்றது. தேரில் எழுந்தருளும் மூர்த்தி கோபுரவாசலை அடைந்ததும், விதிமுறைப்படி பூசை செய்து இறைவனுக்கு வெற்றித்திலகமிட்டு வரவேற்பது மரபு. சுருங்கக் கூறுவதாயின், முப்புரதகனம் என்பது ஆன்மாக்களிடம் குடிகொண்டுள்ள மும்மலங்களை அழித்து, ஆன்மாக்களைக் காப்பதையே குறிக்கும். தேரின் மேற்பகுதி கலசத்தை நோக்கிச் செல்லும்போது குவிந்து செல்கின்றது. அதுபோல மனிதனும் பல்வேறு எண்ணக் குவியல்களுக்குள் அடிமைப்பட்டுக் கிடந்தாலும், இறுதியில் இறைவனை நோக்கி ஒருமுகப்பட்ட சிந்தனையுடன் வாழவேண்டும் என்பதை, தேரின் தத்துவம் உணர்த்துகின்றது. இவ்வாறான எத்தனையோ தத்துவங்களைத் தேரும், ஏனைய உற்சவங்களும் தத்துவார்த்தமாக விளக்கியுள்ளன.

1989 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் நடைபெறுவதற்கு முன், விநாயகர் வள்ளி தேவசேனா சமேதரராய் முருகப் பெருமான் பரிவார மூர்த்திகளைக் கொண்டதாக இக்கோயில் இருந்துள்ளது. இப்பொழுது வீரபத்திரசுவாமி, சுந்தர விமானங்கள் பொருந்திய திரிதளத் தூபியைக் கொண்ட மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ளார். காளிகா அம்பிகைக்கு துவிதளத் தூபியைக் கொண்ட தெற்கு வாசல் கோயிலும், 150 வருடங்களுக்கு மேலாக அருள்பாலித்த பத்திரகாளி சமேத வீரபத்திரசுவாமிக்குத் தனியோர் ஆலயமும், விநாயகர், முருகன், மகாலட்சுமி, நடேசர், தெட்சிணாமூர்த்தி, வைரவர், சண்டேஸ்வரர், ஆகியோர் பரிவார மூர்த்திகளாகவும் காணப்படுகின்றனர். பெரியதும் சிறியதுமான இரு மணிக்கூட்டுக் கோபுரங்கள் இக்கோயிலுக்கு மெருகூட்டுகின்றது. இவற்றுடன் மடப்பள்ளி, களஞ்சிய அறை, வாகனசாலை, சுற்றுமதில், சுற்றுக்கொட்டகை, வசந்தமண்டபம், யாகசாலை, கொடித்தம்பம், ஆகியனவும் அமைக்கப்பட்டுள்ளன. வடக்கே உள்வீதியில் திருமஞ்சனக் கிணறும், வெளிவீதியில் தீர்த்தக்கேணியும், காணப்படுகின்றது. மகா மண்டபம், தரிசன மண்டபம் ஆகியவற்றை அழகிய சிற்பவேலைகள் செய்யப்பட்ட கருங்கல் தூண்கள் தாங்கியுள்ளன. ஈசான மூலையில் அன்னதான மண்டபத்துடன் இணைந்த கல்யாண மண்டபம் ஒன்று அழகாகக் காட்சியளிக்கின்றது. கிழக்குத்திசையில் தேர் முட்டி அமைந்து அருளும் அழகும் நிறைந்த திருக்கோயிலாக உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில் திகழ்கின்றது. உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயிலின் முன்வாசலில் வளர்ந்து பரந்த மருதும், வடமேற்கே வாகையும், வடகிழக்கே அரசும் காணப்படுகின்றன. ஒவ்வொரு செவ்வாயும் மருதமரத்தடியில் பொங்கல் நடைபெறுகின்றது.

சந்திரசேகர வீரபத்திரசுவாமி புரிந்த அற்புதங்கள் சொல்லில் அடங்காதவை. இவை செவிவழிக்கதைகளாக இன்றும் நினைவு கூரப்பட்டு வருகின்றது. ஆரம்பகாலத்தில் ஆறுமுகன் என்னும் அடியவர் வாயிலாகவும், பின்னர் இளையபிள்ளை என்று ஊர் மக்களால் செல்லமாக அழைக்கப்பட்ட, ஆறுமுகம் இளையதம்பி என்ற பக்தரின் வாயிலாகவும், இவ்வூர் மக்களுக்கு சந்திரசேகர வீரபத்திரசுவாமியின் கடாட்சம் அருள் வடிவில் கிடைக்கப்பெற்றதாக, கர்ணபரம்பரைக் கதைகள் மூலம் அறியக் கூடியதாயுள்ளது. கொடிய கொள்ளை நோய் போன்ற பல்வேறு இன்னல்கள் ஏற்பட்ட காலங்களிலும், உடுப்பிட்டி மக்களை சந்திரசேகர வீரபத்திரசுவாமி காப்பாற்றி அருள் புரிந்துள்ளார் என்பதைப் பல்வேறு சம்பவங்கள் தெளிவுபடுத்தியுள்ளன.

சிவனின் வீரபராக்கிரமத்தைப் புலப்படுத்தும் சிவ வடிவங்களுள் ஒருவராகிய வீரபத்திரசுவாமியிடம் உள்ளம் உருகி வேண்டினால், தீவினைகள் அழிந்து, ஆயுள், ஆரோக்கியம், சர்வமங்கலமும் உண்டாகும் என அனுபவம் பெற்றவர்கள் கூறியுள்ளனர். தமிழகத்திலும், ஈழத்திலும் உலகின் எல்லாப் பகுதிகளிலும் திருக்கோயில்கள் எண்ணற்றனவாக எழுச்சி பெற்றுள்ளன. அருளாளர்களும், மன்னர்களும், பக்தர்களும் பயபக்தியுடன் இத்திருக் கோயில்களைப் பேணிப் பாதுகாக்கும் பண்பாட்டினைக் கொண்டவர்களாக விளங்கியுள்ளனர். அவ்வாறே திருக்கோயில்கள் எமது பண்பாட்டின் சின்னங்கள் என்பதைக் கருத்தில் கொண்டு திருக்கோயில்களையும் அதன்மூலம் தமிழர் பண்பாட்டுக் கூறுகளையும் பேணிக்காப்பது அவசியமாகும்.

**வளரும்..**

---

கனடிய செய்திகள் Canadian News

## கனடா நாதவீணா மன்றத்தின் ஆண்டுவிழா – 2025

- சுலோச்சனா அருண்

கனடாவில் நாதவீணா மன்றத்தின் 19வது ஆண்டு நிறைவுவிழா சென்ற வாரம் மிகச் சிறப்பாக ரொறன்ரோவில் உள்ள தமிழ் இசைக்கலா மன்றத்தில் நடைபெற்றது.மங்கல விளக்கேற்றி, தமிழ்த்தாய் வாழ்த்து, கனடா தேசியப் பண் இசைக்கப்பட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

வீணை ஆசிரியர் திருமதி குகனேஸ்வரி சத்தியமூர்த்தி கனடாவில் கடந்த 19 வருடங்களாக நாதவீணா மன்றத்தின் அதிபராக இருந்து வீணை இசையைக் கற்பித்து வருகின்றார். இவர் இசைக்கலைமணி பட்டத்தையும், வடஇலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் தரத்தை முடித்து சங்கீதகலாவித்தகர் பட்டத்தையும் வீணையிசையில் பெற்றவர். இவரிடம் வீணை இசை கற்ற 8 மாணவர்கள் இதுவரை கனடாவில் அரங்கேற்றம்கண்டிருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றித் தமது திறமையை வெளிக்காட்டியிருந்தனர். மொழிக்கலப்பில்லாமல் தமிழ் பாடல்களை வீணையில் இசை மீட்டமுடியும் என்பதை ஆசிரியர் தனது மாணவர்கள் மூலம் வெளிப்படுத்தியிருந்தார். அது மட்டுமல்ல, முருகனைப் போற்றும் பக்திப் பாடல்களும் இந்த நிகழ்வில் இடம் பெற்றிருந்ததால், பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்திருந்தன. வீணை ஆசிரியர் திருமதி குகனேஸ்வரி, தமிழ்மிரர் ஆசிரியர் சாள்ஸ் தேவசகாயம் ஆகியோரது உரைகள் இடம் பெற்றன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட எழுத்தாளர் குரு அரவிந்தன் தனது உரையில்,

நாத வீணா மன்றத்தின் தாரக மந்திரமாக "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து." என்ற திருக்குறள் இருக்கின்றது. குருவான ஆசிரியரிடம் இருந்து பெற்ற கல்வி தொடர்ந்து பல தலைமுறைகளுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதைத்தான் திருவள்ளுவர் இங்கே அழகாகக் குறிப்பிடுகின்றார். ஆனால், இந்த மாணவர்களில் ஒருவருமே இனி வரும் காலங்களில் ஆசிரியர்களாக மாறாவிட்டால், என்ன நடக்கும்? மிகவும் கஸ்டப்பட்டுப் பயின்ற இந்தக் கலை இவர்களுடன் முடிந்துவிடும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும், எனவே உங்கள் பிள்ளைகளைத் தொடர்ந்தும் இத்துறையில் ஈடுபடுவதற்கு ஆதரியுங்கள், என்னிடம் கல்வி கற்ற சில மாணவர்களை மேடையில் பார்க்கும் போது எனக்குப் பெருமையாக இருக்கிறது என்று அங்கு கூடியிருந்த பெற்றோர்களுக்கு எடுத்துரைத்தார்.



அவர் மேலும் குறிப்பிடும் போது எங்கள் பாரம்பரிய இசைக்கருவி பற்றிப் பல படல்களில் குறிப்பிடப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டினார். ஆரண்ய காண்டத்தில் "உற்றவன் காண் தகும் நீண்ட வீணைக்கொடிப் பற்றி ஒடித்து உயர் வானவர் ஆசி கொண்டான்" என்று கம்பரும், சம்பூர்ண ராமாயணம் திரைப்படத்திற்காக மருதகாசி "ஆனந்தகான அமுத மழையே பொழிந்து, மனம் தனை உருக வழி செய்த வீணைக்கொடியுடைய வேந்தனே!" என்று இராவணனைப் பாராட்டுவதையும், 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் "மாசில் வீணையும்" என்றும், "எம்மிறை நல்வீணை வாசிக்குமே" என்று சம்பந்தரும் பாடியிருப்பதையும் நினைவூட்டினார். மேலும் அவர் தனதுரையில்,

"வெள்ளைத்தாமரைப் பூவில் இருப்பாள் வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்" என்றும் "நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ" என்றும் புதுமைக்கவி பாரதியார் வீணை பற்றிக் குறிப்பிட்டதையும், புரட்சிக்கவி பாரதிதாசனோ ஒருபடி மேலே சென்று. "துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?" என்று கேட்டதையும் குறிப்பிட்டார்.

முற்காலத்தில் தமிழர்கள் பாவித்த "செங்கோட்டி யாழே" பின்னாளில் வீணையாக மாறியதாக "பாணர் கைவழி" என்ற ஆபிரகாம் பண்டிதரின் மூன்றாவது மகனான வரகுணபாண்டியன் எழுதிய நூலில் மிக விளக்கமாக சொல்லப்பட்டிருப்பதையும் எடுத்துக் காட்டினார். சங்க இலக்கியத்தில் திருக்குறள் காலம்வரை யாழ் பற்றியே குறிப்பிடப் பட்டிருந்ததையும், அதன் பின் சிலப்பதிகாரத்தில்தான் யாழ் என்ற சொல்லுக்குப் பதிலாக வீணை என்ற சொல் பாவிக்கப்பட்டதையும், யாழ் என்பதும் வீணை என்பது அடிப்படையில் ஒரே கருவியைக் குறிப்பதாகவும், எங்கள் விபுலானந்த சுவாமிகளும் யாழ் பற்றி ஆய்வு செய்து யாழ்நூலை எழுதியிருப்பதையும், இது போன்ற நிகழ்வுகள் எங்கள் மொழியும், பண்பாடும் இந்த மண்ணில் தொடர்ந்தும் நிலைத்து நிற்க வழிவகுக்கும் என்றும் குறிப்பிட்டார்.









இசை மற்றும் நடன ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்ட நாதவீணா மன்றத்தின் இந்த நிகழ்வை ஆசிரியை சிவலோக நாயகி கெங்கேஸ்வரராஜா மிகவும் சிறப்பாக தொகுத்து வழங்கினார் அதை நெறிப்படுத்தினார்.

# இவ்வார ராசிபலன்

**12-12-2025 வெள்ளி தொடக்கம் 18-12-2025 வியாழன் வரையும்**


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'



"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மேஷம்:** உடல்நலத்தில் ஷேமம் கிடைக்கும் வாரம். ஆலய தரிசனம் அமைதியை தரும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பண நடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். பூமியால் லாபம் உண்டு. செய்த்தொழில் வியாபாரம் செழிக்கும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புக்கள் விலகும். நோய், நொடிகள் அகலும். பெயர், புகழ், கௌரவம் செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். விரும்பியது நிறைவேறும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். நட்பு வட்டம் விரிவடையும். பாராட்டுக்கள் கூடும். வேண்டும் வரம் கிட்டும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். அரசியல்வாதிகள், ஆன்மீக வாதிகள், உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். பழைய கடன் அடையும். பங்குச்சந்தை லாபம் தரும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். கலை ஆர்வம் பெருகும். பொறுப்புக்கள் சிறப்பு சேரும். ஆதாயம் பெருகும். சம்பளம் எதிர்பார்த்தபடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: 4,3,9,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,H




**ரிஷபம்:** கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும் வாரம். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். முகப்பொலிவு கூடும். உடல் நலம் சிறக்கும். மனதில் தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடுங்கள். திருமண பாக்கியம் கூடி வரும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை காணப்படும். செல்வாக்கு உயரும். உத்தியோக பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். நவகிரஹ அனுகிரஹம் நன்மை அளிக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். பந்தாவும் குறையாது. பாக்கெட்டில் காசும் கரையாது. தொட்டது துலங்கும். நினைத்தது நடக்கும். இனிக்கும் வாரம் தான். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப்பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். குழப்பங்கள் நீங்கும். குதூகலம் கூடும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். கடன் கச்சைகள் தீரும். குடும்ப மேன்மை அதிகரிக்கும். தொட்டக் காரியம் ஜெயமாகும். பொருளாதார நிலை உயரும். தேவைகள் பூர்த்தியாகும். தேக பலம் கூடும். தொழில் போட்டி மறையும். புதிய முயற்சிகள் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் செலுத்துவது நல்லது.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பச்சையம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,5,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P




**மிதுனம்:** மதிநுட்பத்தோடு செயல்படும் வாரம். வியாபாரம் வெற்றி தரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு வளரும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். தந்தை உடல் நலனில் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. பால் தானம் பாவம் போக்கும். வம்பு, தும்புகள் ஒழியும். மேலதிகாரியின் பாராட்டுக் கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழிலில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்கள் கைகூடி வரும். இல்லத்தில் சுபகாரியங்கள் நடந்தேறும். நட்பு வட்டம் விரிவடையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து அலைமோதும். புதிய வாய்ப்புக்கள் பயன் தரும். புத்தி சாதுர்யம் பெருகும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். சிக்கனம் தேவை. காதலர்கள் ஒற்றுமை அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. வரவுகள் பெருகும். வழக்குகள் முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காளம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,K




**கடகம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். கட்டிடத்தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். பயண முயற்சி பலன் தரும். முன் கோபத்தை குறைக்க வேண்டும். ஆபத்துக்கள் விலகும். அதிகாரம் உயரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. வாகன யோகம் உண்டு. வரவுகள் திருப்தி தரும். கடன் பாக்கிகள் வசூலாகும். பேச்சில் நிதானம் தேவை. பொருளாதாரம் மேம்படும். தோதான வாழ்வமையும். இல்லம் தேடி வாய்ப்புகள் வரும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். புதிய தொழில் மாற்றம் ஏற்படும். எதிலும் வெற்றி கிட்டும். திருமண தீபம் சுடர்விடும். அணிமணிகள் சேரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு இனிக்கும். ஏற்றமான தருணம் அமையும். தொழில் அபிவிருத்தி உண்டு. மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் வரும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். சிரமப்பட்ட காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் புரளும். திடீர் பயணம் உற்சாகம் தரும். கர்ம வினைகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பவானி அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,T




**சிம்மம்:** அதிகார பேச்சுக்கள் அரங்கேறும் வாரம். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். ஆரோக்யம் சீராகும். தன வரவுகள் பெருகும். நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. நீண்ட நாள் பிரச்சினை முடிவிற்கு வரும். நல்லோர்கள் வாழ்த்து கிடைக்கும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல் நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் அதிகரிக்கும். அன்னதானம் செய்து ஆனந்தம் அடையலாம். பித்ருக்கள் சாபம் நீங்கும். சேமிப்பு பெருகும். திறமைகள் வெளிப்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். தொழில் இடமாற்றம் நன்மை தரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். எதிரிகள் உதிரியாவார்கள். செல்வாக்கு கூடும். சொல்வாக்கு மேம்படும். பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. "ஆலய தரிசனம் பாவ விமோசனம்" "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" மாற்றம் ஏற்படும். புதுமையை விரும்புவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: யானை பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**கன்னி:** வரவுகள் அதிகரிக்கும் வாரம். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். உறவினர் வருகை உண்டு. புதிய நட்பு ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன யோகம் உண்டு. வெற்றியை எட்டும் காலம். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். குடும்பத்தினர்களிடம் அனுசரிப்பு ஏற்படும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். மகிழ்ச்சியான செய்தி வரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பெண்களின் ஆலோசனை ஆதாயம் தரும். இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். குடும்பத்தில் மேன்மைகள் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பழைய கடன் வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பேச்சில் பணிவு தேவை. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மேன்மைகள் அதிகரிக்கும். திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மன நிம்மதி அதிகரிக்கும். விவேகமான பேச்சுக்களால் வீண் பழி அகலும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 4,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,L




**துலாம்:** சாதகமான சூழ்நிலைகள் அமையும் வாரம். தொட்டது துலங்கும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ண மயமாகும். உறவினரால் உதவி கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். பணியாட்களின் ஆதரவு பெருகும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். தொழிலின் ரகசியம் காப்பாற்றப்படுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்கள் அன்பு அதிகரிக்கும். மற்றவர்களிடம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டு. தேக ஆரோக்கியம் திருப்தி தரும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய் வழி உறவில் கவனம் தேவை. மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். கலவரமான சூழ்நிலை காணப்படும். போட்டி, பொறாமைகள் விலகும். பாகப்பிரிவினை ஏற்படும். மனை வாங்கும் யோகம் உண்டு. மன நெருக்கடிகள் தீரும். ஊக்கம் அதிகரிக்கும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மருத காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,6,4,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K

(தொடர்ச்சி 22 பக்கம்)

# 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மார்க்கண்டு உதயகுமார்**
(புத்தூர் உபதபால் ஊழியர்)

**உதயகுமார் வசந்திமாலா**
(நீர்வேலி மேற்கு, 4ஆம் மைல், இராஜ வீதி, நீர்வேலி)

**தோற்றம்**
24.12.1956

**தோற்றம்**
08.02.1966

**இறைவன் அடியில் : 08.12.2011**

**மறக்க முடியுமோ?**

ஆறாத வடுவாய் எம்மனதில்.............

பகைவர்களின் அசுரத்தனம் தாண்டவமாடி
பதின்நான்கு ஆண்டுகள் பறந்தது.

உறவெனும் வேடம்பூண்டு வேரறுத்தவர்கள்
ஊரறிய இறைவனால் பழிதீர்த்தல் கண்முன்னே நடந்தாயிற்று.

இரத்த சொந்தங்களே மண்ணாசையால் விசம்விதைக்க
இரக்கமற்று செய்யப்பட்ட கொடூர செயல் அது.

ஆசையாய் பெற்றுவளர்த்த அம்மாவுடன்
அரவணைத்து பண்பூட்டிய அப்பாவையும் சேர்த்து.

நொடிப்பொழுதில் கண்ணிமைத்து மூடமுன்பு
நோகாமல் இருந்து வஞ்சம் தீர்த்தீர்கள்.

வசந்தா எனும் மலரை குமர்ப்பிள்ளை கண்முன்னே
குமார் எனும் குணமான பண்பாளனையும் வேட்டையாடினீர்கள்.

அடேய்! படுபாதகர்களே!! இத்தனையும் சொல்லும் பாடம்
ஆண்டவன் இருக்கிறான்.காத்திருந்து கதைமுடிப்பான்.

பாவிகளால் காவுகொள்ளப்பட்டாலும் போற்றுதலுக்குரியவர்கள்
பெற்றோரே உங்கள் ஆத்ம சாந்திக்காக உளமாற வேண்டுகிறோம்.

**என்றும் உங்கள் நினைவிலேயே வாழும்...**

**ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி!**

தொடர்புகளுக்கு :
+1(289) - 952 - 3775

**பிள்ளைகள் :**
செந்தூரன் (பிரான்ஸ்), குகதீபன் (கனடா), சங்கீதன் (கனடா), கோபிகா (கனடா)

(CS 60120) E

# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** தனித்து நின்று ஜெயித்துக் காட்டும் வாரம். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். பயணம் லாபம் தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். கமி'ன் தொழில் லாபம் தரும். வாழ்வில் வசந்தம் கூடும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மைகள் அதிகரிக்கும். சூழ்நிலைகள் சாதகமாகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. அந்நிய தேசப் பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். புண்ணியம் சேரும் காலம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். வீண் பிரச்சனைகள் அகலும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். ஆசைகள் பூர்த்தியாகும். வாயில் தேடி வரன் வரும். வியாபாரத்தில் வேகம் கூடும். உத்தியோக உயர்வு தாமதமாகும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். விலகிச் சென்றவர் விரும்பி வருவர். திருமண பேச்சு முடிவிற்கு வரும். வரவுகள் திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும். தாய் வழி தகராறுகள் குறையும். குடும்ப கௌரவம் உயரும். காதல் கைகூடும். கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். விரக்திகள் மறையும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் உயரும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். தேக ஆரோக்யம் மிளிரும். எதிர்கால சிந்தனை ஏற்றம் தரும். விரோதங்கள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அன்னமார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 6,3,9,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,P




**தனுசு:** கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும் வாரம். எடுத்த தொழில் முயற்சியில் வெற்றி உண்டாகும். உள்ளம் மகிழும். பொல்லாதவர்கள் தொல்லைகள் ஒழியும். உடல்நலம் சீராகும். உற்சாகம் மேலோங்கும். உறவுகளால் நன்மை ஏற்படும். பயணம் வெற்றி தரும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. கல்வியில் மேன்மைகள் உண்டாகும். துயரம் இல்லாத உயரங்களை சந்திப்பீர்கள். முன்னோர்கள் ஆசீர்வாதம் உண்டு. முன்னேற்றங்கள் அதிகரிக்கும். மாற்று மருத்துவம் பலன் தரும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவுப்போகும். சுபச்செய்தி தேடி வரும். பாராட்டுக்கள் உயரும். அலைச்சல் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரம் சுமாராக இருக்கும். வாகன மாற்றம் ஏற்படும். கடன்சுமை குறையும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மாலை நேரத்தில் இனிய தகவல் வந்து சேரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். வளமான சிந்தனை உதயமாகும். அலைச்சல் ஆதாயம் தரும். தீமைகள் விலகும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். பயணங்களால் வெகுமதி கூடும். கூட்டுப்பிரார்த்தனை நன்மை தரும். இடையூறுகள் அகலும். பெண்களுக்கு பெருமை சேரும். பொது வாழ்வில் புகழ் கூடும். தொழில் வளர்ச்சி பெருகும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும். ஆன்மீக நாட்டம் ஏற்படும். வறுமையின் வாட்டம் குறையும். அவமானங்கள் அகலும். உதவிகள் கிடைக்கும். வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வெகுமானம் கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பிரம்மசக்தி, அதிர்ஷ்ட எண்: 2,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,Z




**மகரம்:** கர்ஜனையோடு வலம் வரும் வாரம். பிரிந்த கணவன், மனைவி ஒன்று சேர்வார்கள். பெற்றோர்கள் உதவி கிடைக்கும். விவேகம் வெற்றி தரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். எண்ணங்களால் ஏற்றம் பெருகும். உடல்பொலிவு கூடும். பணப்பற்றாக்குறை நீங்கும். கல்வியில் கவனம் தேவை. பயணத்தால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உறவினர்கள் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டாகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். விறுவிறுப்பாக செயல்படுவீர்கள். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் தொடரும். வெளிவட்டாரத் தொடர்பு பெருகும். வேண்டாத நபர்கள் விலகுவர். வினைகள் அகலும். புதுமைகள் நிறைந்த காலம். நல்லச்செய்திகள் நாடி வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தடைகள் அகலும். உயர் பதவி யோகம் உண்டு. மன உற்சாகம் களை கட்டும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வ திருப்பணிகளில் ஆர்வம் கூடும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். பொருள் வரவு இருக்கும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பணியில் பாராட்டு கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வயிறு உபாதைகள் வந்து போகும். வார்த்தைகளில் சற்று கவனம் தேவை. நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஈசான்ய லிங்கம், அதிர்ஷ்ட எண்: 4,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J




**கும்பம்:** மாங்கல்ய பாக்கியம் அமையும் வாரம். பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். காரிய வெற்றி கிட்டும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். ஆடம்பர பொருள் சேரும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குடும்ப குழப்பங்கள் அகலும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். பெண்களால் பெருமை உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டு. சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். கடன் பாக்கிகள் வசூலாகும். பணவரவு திருப்தி தரும். குடும்ப குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோ'ம் அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். சகோதர ஒற்றுமை உண்டு. ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய தொழில் அமையும். பெருமைகள் சேரும். அடுத்தவர் தலையீடு அமைதியை கெடுக்கும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். பயணம் அனுகூலம் தரும். மனம் மகிழ்ச்சி அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி ஏற்படும். சகோதர ஒற்றுமை பலப்படும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் வாயில் தேடி வரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். ஆண்களின் அதிகாரம் உயரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். சுப விரயம் உண்டு. குடும்ப மேன்மைகள் உண்டாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ வைகுண்ட நாதர், அதிர்ஷ்ட எண்: 9,7,5,4
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,N




**மீனம்:** இனிய நட்புக்களால் பெரிய வெற்றி கிடைக்கும் வாரம். உண்மைகள் வெளிப்படும். உறவுகள் தாமதமாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தன சேர்க்கையுண்டு. மன நிம்மதி குறையும். அலைச்சல் அதிகரிக்கும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். வாகனச் செலவு ஏற்படும். பணியில் பாராட்டுக் கிட்டும். சிக்கனத்தை கையாள வேண்டும். பொறுப்புக்கள் கூடும். சேமிப்பு அதிகமாகும். புதிய சிந்தனை உதயமாகும். அணிகலன்கள் சேர்க்கை ஏற்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதம் உண்டாகும். கௌரவத்தில் கவனம் தேவை. கலக்கமான மனநிலை காணப்படும். பயணம் அனுகூலம் தரும். வரவுகள் திருப்தி தரும். உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். அத்தியாவசிய தேவைககள் பூர்த்தியாகும். போதிய தனவரவு இருக்கும். மாலை நேரத்தில் கவனம் தேவை. பெண்களுக்கு ஆபரணம் சேரும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பெருமைகள் கூடும். செல்வாக்கு உயரும். குடும்ப அன்யோன்யம் சிறக்கும். நல்லச் செய்திகள் நாடி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் பிடிப்பு ஏற்படும். முயற்சிகளில் வளர்ச்சியடையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். தொழில் ரகசியம் காப்பது நல்லது. உறவினர்களிடம் சஞ்சலம் ஏற்பட்டு மறையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ செல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 7,4,1,2
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R

## பழம் சோற்றுக் குழையல்

----------------------------

முதல் நாள் இரவு ஊறவைத்த
குத்தரிசிச் சோறும் குரக்கன் பிட்டும்
மரவள்ளிக் கறியும் மீன் குழம்பும்
பாட்டி குழைத்துப் பதமாய்த் தந்ததை
பூவரசம் இலையில் வாங்கி நாங்கள்
பாணிப் பனாட்டுடன்
பக்குவமாய்ப் புசித்ததை
பாரில் உள்ளவரை மறக்கத்தான் முடியுமா?
மரக்கறிக் குழையல் என்றால்
சோற்றில் ஒரு கவளமும்
சின்ன வெண்காயம் ஒரு கடியும்
தொட்டுக்கொள்ள
உவப்பாய் ஊறுகாயும்
சேர்த்தே உண்டுவிட்டால்
அரை நாள் துலா மிதிப்போம்
அறுநூறு கண்டுத் தறை கொத்துவோம்
ஒடியல்மாப் பிட்டும் ஊறவைத்த சோறும்
ஓரா மீன் குழம்பும்
ஒன்றாய்க் கலந்தே
ஒரு பிடி பிடித்தால்
ஒருநாள் பொழுதை
ஒட்டகம் போல்
தாங்குமன்றோ?
கனடா வந்து நாங்கள்
கால் பதித்து விட்டதாலே
பாட்டியும் இல்லை
பழம் சோறும் இங்கில்லை
ஒரு வாரச் சோற்றை ஒருமித்து ஆக்கியே!
பிரிட்ஜில் வைத்துப் பிரேதமாக்கி
சூடாக்கிச் சூடாக்கி உண்ணுகின்றோம்
சத்துணவு உண்ட நாங்கள்
இப்போ
செத்த உணவு உண்ணுகின்றோம்.

----------------------------

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



### OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

**NESAN**

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8












26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்



இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
416 752 1524



உதயம் 1549 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 12, 2025





# இலங்கையில் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரண உதவிகளுககாக நிதி அன்பளிப்புச் செய்ய ஒன்றாரியோ மாகாண அமைச்சர்

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரண உதவிகளு-ககாக கனடாவைத் தளமாகக் கொண்ட **Behind Me Foundation** அமைப்பு நிதி சேகரிப்பு திட்டத்தை தற்போது அமுல்படுத்தியுள்ளது. மேற்படி திட்டத்திற்கு தமிழ் வர்த்தக அன்பர்களும் தனி நபர்களும் தங்கள் பங்களிப்புக்களை வழங்கியுள்ளனர். மேற்படி நிதி சேகரிப்பு திட்டத்திற்கு தமிழரல்லாவர்களின் ஒரே ஒருவராக நிதி அன்பளிப்புச் செய்துள்ள ஒன்றாரியோ மாகாண அமைச்சர் கௌரவ றேமண்ட் சோ அவர்களை பலரும் பாராட்டியுள்ளனர். இங்கே காணப்படும் படத்தில் **Behind Me Foundation** அமைப்பின் நிறுவனர் கனேந்திரன் செல்வராஜா அமைச்சரிடமிருந்து அவரது அன்பளிப்பைப் பெற்றுக்கொள்வதைக் காணலாம்.

# சர்வதேச மருத்துவம் மற்றும் சுகாதார அமைப்பிற்கு நிதி வழங்கும் கொடையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு!



**International Medical and Health Orgnization** என்று அழைக்கப்பெறும் சர்வதேச மருத்துவம் மற்றும் சுகாதார அமைப்பிற்கு நிதி வழங்கும் கொடையாளர்களை கௌரவிக்கும் மற்றும் அவர்களுக்கு அமைப்பின் பணிகளை பற்றிய விபரங்களை எடுத்துரைக்கும் நிகழ்வு கடந்த7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று மார்க்கம் நகரில் உள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளன கேட்போர் கூடத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. (தொடர்ச்சி 11ம் பக்கம்)

# மார்க்கம் நகரத்தில் இயங்கிவரும் Green Borough Seniors Wellness Club மூத்தோர் அமைப்பு தனது 10வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது



மார்க்கம் நகரத்தில் திருமதி செல்வா அருள்ராஜசிங்கம் அவர்கள் தலைமையில் வெற்றிகரமாக இயங்கிவரும் **Green Borough Seniors Wellness Club** மூத்தோர் அமைப்பு தனது 10வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் சிறப்பான ஒரு நிகழ்வை கடந்த 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மார்க்கம் நகரத்தில் உள்ள விழா மண்டபம் ஒன்றில் நடத்தியது.

அழைக்கப்பெற்ற அரசியல் பிரதிநிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன்-மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி மற்றும் மாநகரசபை உறுப்பினர் நீதன் சண்முகராஜா ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரைகளை வழங்கினர்.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

# 41 வருடங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு, ஒதியமலை கிராமத்தில்கொல்லப்பட்ட 32 தமிழர்கள் நினைவுகூரப்பட்டனர்



நாற்பத்தொரு ஆண்டுகளுக்கு முன்பு அரசாங்க ஆயுதப் படைக-ளால் கொல்லப்பட்டு இன்னும் நீதி கிடைக்காத 32 தமிழ் கிராமவாசிகளுக்கான நினைவஞ்சலி நிகழ்வு முல்லைத்தீவு, ஒதியமலை கிராமத்தில் நடைபெற்றது.

டிசம்பர் 2, 1984 அன்று முல்லைத்தீவில் உள்ள ஒதியமலை கிராம அபிவிருத்தி மண்டபத்திற்கு 32 நிராயுதபாணியான தமிழ் கிராமவாசிகள் வரவழைக்கப்பட்டு அரச இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

படுகொலை நடந்த இடத்திற்கு எதிரே கட்டப்பட்ட நினைவுச் சின்னத்திற்கு பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் டிசம்பர் 2, 2025 செவ்வாய்க்கிழமை மலர் தூவி, விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர். (தொடர்ச்சி 16ம் பக்கம்)